Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-09 | 25-10-2004 | திங்கட்கிழமை | ஓசை -250





# எமது மக்கள் அடைந்துள்ள விரக்திநிலையை

# சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறினோம்

## பி.பி.ஸிப் பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல்வன்

**தற்போது அமைதிப்பேச்சுக்கள் தேக்கமடைந்திருக்கின்ற சூழ்நிலையில் எமதுமக்கள் மனிதாபிமான நெருக்கடியைச் சந்திப்பது மட்டுமல்லாது அவர்கள் ஒரு விரக்தி நிலையையும் அடைந்துகொண்டிருக்கின்றனரென்பதையும் சர்வதேச சமூகத்திற்கு நாங்கள் எடுத்துக் கூறியிருக்கின்றோம். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**



சுவிற்சர்லாந்தில் சூரிச்சில் தங்கியிருந்த அவரை ஐரோப்பிய நாடுகளில் நடந்த சந்திப்புகள் குறித்து பி.பி.ஸி. செய்தியாளர் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

இதனை விட முக்கியமான சர்வதேச சமூகத்தின் மத்தியில் தவறாகப் பரப்பப்படுகின்ற செய்திகளை எங்களுடைய தலைமைப்பீடத்தின் உண்மையான நிலைப்பாடுகளை நேரடியாக விளக்குவதற்குரிய சந்தர்ப்பமாக இந்த விஜயம் கிடைத்திருக்கின்றது.

* உங்களுடைய விளக்கங்கள் உங்கள் தரப்பு வாதங்களிலிருந்து மேற்கத்தேய நாடுகளின் அதிகாரிகள் தலைவர்கள் ஏற்றுக்கொண்டதாக நினைக்கின்றீர்களா?

எங்களுடைய தரப்பினது நியாயங்களையும், உண்மைகளையும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம்.

அந்த வகையில் அவர்கள் அதனைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். ஏனெனில் தமிழர் விரோதப் போக்கினைக் கொண்ட குழுக்களும் சமாதானத்திற்கெதிரான சக்திகளும் தவறாகப் பரப்பி வருகின்ற செய்திகளின் உண்மையற்ற தன்மையை எடுத்து விளக்கியுள்ளோம். அத்துடன் தலைமைப்பீடத்தினுடைய நிலைப்பாடுகளை மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்து விளக்கியதன் அடிப்படையில் அவர்கள் அதனை சரியாகப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்பதை நான் நம்புகிறேன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானப்படைத் தாக்குதலில் பலியானோர் நினைவு நாள் அனுஷ்டிப்பு



(படம்: செல்வா)

1987 ஆம் ஆண்டு யாழ்.சாவகச்சேரிப் பகுதியில் வைத்து இந்திய இராணுவத்தின் வான் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட 40 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 17 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று தென்மராட்சிப் பகுதியில் மிக உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சேது சமுத்திரத்திட்டத்திற்கு சிறில. கடற்படை ஆட்சேபம்

இந்தியாவின் சேது சமுத்திர திட்டத்தை சிறிலங்கா கடற்படையினர் எதிர்த்துள்ளனர் இது தொடர்பில் கடற்படையினர் நேற்று தமது ஆட்சேப மனுவை வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளனர் சேதுசமுத்திரத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் அது இலங்கைக்கு பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அத்துடன் இலங்கைக்கு சூழல் தொடர்பான அச்சுறுத்தலையும் அது ஏற்படுத்தும் எனக் கடற்படையினர் தமது ஆட்சேப மனுவில் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டம் அமுல்செய்யப்படுவதன் காரணமாக தமது கடல்வழி போக்குவரத்திலும் பாதிப்பு நிகழும் எனத் தெரிவிக்கும் கடற்படையினரின் ஆட்சேபனையை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல தயா சந்தகிரியின் தலைமையிலான குழுவினர் வெளிநாட்டமைச்சிடம் சமர்ப்பித்துள்ளனர்.

(32)

## பேச்சுவார்த்தை குறித்துச் சந்திரிகா இவ்வாரத்தில் அறிவிப்பார்!

### - ஐ.தே.கட்சி நம்பிக்கை

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த வாரத்தில் ஒஸ்லோ பிரகடனப்படி தமிழீழ விடுதலைப புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை மையமாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அறிவிப்பார் என ஐக்கிய தேசிய கட்சி தரப்பு தெரிவித்துள்ளது. ஒஸ்லோ பிரகடனப்படி. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சமஷ்டி சுயாட்சி என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என்பதா கும். இதன் அடிப்படையில் சனாதிபதி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையிலான தமது இந்த வார அறிவிப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஒஸ்லோ பிரகடனத்தை உத்தியோக பூவர்மாக ஏற்றுக்கொள்ள வேண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை துறைமுகத்தைச் சுற்றி புலிகளின் நிலைகள் இல்லை

### - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

திருகோணமலை துறைமுகத்தை சுற்றி· தமிழீழ விடுதலைப்புலிகளின் எந்த ஒரு இராணுவ ஏற்பாடுகளும் இல்லை என இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு இந்த வாரத்தில் அரசாங்கத்திடம் சமர்பித்துள்ள பிந்திய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சொல்னெஸ் கருத்துரைக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டு பகுதியில் திருகோணமலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி.சபையைப் புலிகளிடம் ஒப்படைப்பது பிரிந்து செல்வதற்கான அங்கிகாரமாகும்!

### - மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

வடக்கு கிழக்கு பிரதேசத்தின் இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தால் அது அவர்களுக்கு பிரிந்து செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சமனாக அமைந்து விடும் என மல்வத்த மகாநாயக்கர் திப்பிட்டுவாவே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்

நேற்று அகில இலங்கை சமாதான நீதிவான்களின் குழு ஒன்று அவரை சந்தித்த போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார். தமிழீழ விடுதலைப்புலிகள் காவல்துறை மற்றும் இராணுவப் பிரிவுகளை கொண்டிருப்பதால் இடைக்கால நிர்வாகம் என்பது அவர்களுக்கு பிரிந்து செல்வதற்கான அங்கீகாரத்தை கொடுத்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டார் அரசாங்கம் இன்று மக்களை வரிகளுக்கு அடிமைப்படுத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீதிவிபத்துக்களைத் தவிர்க்க கிளிநொச்சியில் மாநாடு

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப்பகுதியில் இடம்பெற்று வரும் வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் முகமாக கிளிநொச்சியில் பெரும் மாநாடு ஒன்றை நடத்த இருப்பதாக கிளிநொச்சி மருத்துவசங்கம் அறிவித்துள்ளது.

எ-9 பிரதான வீதி போக்குவரத்துக்காக திறக்கப்பட்டதன் பின்னர் வன்னிப்பகுதியில் வீதி விபத்துக்களின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் பெறுமதிமிக்க பல உயிர்கள், சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் மத்தியில் ஒருவித பீதி காணப்படுகின்றது. இந்நிலையில் இதற்கான தீர்வை காணவேண்டிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயிகள் உண்ணாவிரதம்

அம்பாந்தோட்டை லுனகம பெஹரவில் 50 விவாசாயிகள் நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் தாம் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளனர். எதிர் வரும் பெரும்போக நெற்செய்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மருதமுனையில் மாணவன் தலையில் அடித்துக்கொலை

மருதமுனையில் நேற்று முன்தினம் மாணவர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.10 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் 16 வயதுடைய முகமட்பாரத் அப்துல்வாகி என்ற மாணவனே இவ்வாறு அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்

இச்சம்பவம் பற்றித் தெரிய வருகையில் குறிப்பிட்ட மாணவன் பாடசாலைக்குச் சென்று திரும்பிய வேளை மருதமுனை மதூர் மௌலான மைதானத்தருகில் வைத்து தலையில் அடித்துத்தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் கல்முனைப் பொலிசார் தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.
T.P. 021-2285750 (சி-10551)

### மணமகள் தேவை

யாழ்.இந்து [illegible] குடும்பம் அரச உத்தியோகம் நற்பண்புகளுடைய 28 வயது திருவாதிரை நட்சத்திர மணமகனுக்கு அழகிய நற்பண்புகளுடைய மணமகள் தேவை "புதியபாலம்" தபால் பெட்டி இல.10 வவுனியா (5203)

### காணி விற்பனைக்கு

இடம்கணேசபுரம், (36/2) ஏக்கர்1/4 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு முகவரி இலக்கம் 385, ஜெயந்திநகர், கிளிநொச்சி, (சந்தைமுன்பாக. (4926)

### தவறிவிட்டது

முழுப்பெயர் நடராசா குமுதினி, பிறந்த திகதி 1966.06.21, முகவரி 200, கோட்டைகட்டியகுளம், அக்கராயன், தே.அ.அ.இல 666733550v, புளியங்குளத்திற்கும், வட்டக்கச்சிக்கும் இடையில் தொலைந்து விட்டது. இதனைக் கண்டு எடுப்பவர் வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம், வட்டக்கச்சி, கட்சன் வீதி, இராமநாதபுரம், என்ற முகவரிக்கு கொடுககவும்.
தகவல் குட்டி. (4927)

# முல்லை மாவட்ட உழவு இயந்திர சாரதிகளுக்கு தமிழீழ காவல்துறையால் கருத்தூட்டல் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக உழவு இயந்திரங்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுவதுடன், உழவு இயந்திர சாரதிகள் சிலர் வீதி ஒழுங்கு விதிகளை சரியான முறையில் கடைப்பிடிக்காததால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளது. இவ் விபத்துக்களை தடுப்பதற்காக உழவு இயந்திர சாரதிகள் மற்றும் உரிமையாளர்களுக்கான வீதி ஒழுங்கு விதிகளை அறிவித்தும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் முல்லை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காலை 10.00மணிக்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வீதி ஒழுங்கு கருத்தூட்டல் நிகழ்வை புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் வ.ராஜசுசிதனன் உதவிப்பொறுப்பாளர் சி. பிரதீப்குமார் ஆகியோர் நடாத்தினர்.

மாலை 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கருத்தூட்டலை புதுக்குடியிருப் புகாவல் பணிமனைப் பொறுபபாளர் நடத்தினார்.

முல்லைத்தீவு பிரதேசத்தில் காலை 10.00மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் முல் லைத்தீவு காவல்பணிமனைப் பொறுப்பாளர் க.குகணேஸ்வரன் வீதி ஒழுங்குக் கருத்துக்களை வழங்கினார்.

பாண்டியன் குளம் பிரதேசத்தில்காலை 10.00 மணிக்கு பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற கருத்தூட்டல் நிகழ்வில் துணுக்காய் காவல் பணிமனைப்பொறுப்பாளர் த.கமலசிறீஸ்கரன் கருத்தூட்டல்களை வழங்கினார்.

மாங்குளம் பிரதேசத்தில் காலை 10.00 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளர் மா.லோகநாதன் கருத்தூட்டல் களை வழங்கினார்.

இதனை அடுத்து பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா வடக்கு கனகராயன் குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளர் மா.லோகநாதன், உதவிப்பொறுப்பாளர் கி.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்தூட்டல்களை வழங்கினார்கள்.

இவற்றுள் சுமார் 500 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திர சாரதிகளும், உரிமையாளர்களும் பங்குபற்றி பயனடைந்ததுடன், காவல் பணிமனைப் பொறுப்பாளர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இக்கருத்தூட்டல் நிகழ்வில் சேறுதாங்கி (மட்காட்)யில் பயணிகளை ஏற்றிச்செல்லுதல்,

இரவு வேளையில் வெளிச்சமின்றிச் செல்லுதல்,

இழுவைப்பெட்டியில் பாதுகாப்பற்ற முறைகளில் பொதிகளை ஏற்றுதலும், பொதிகளின் மேல் பயணிகளை ஏற்றிச்செல்வதும், மதுபோதையில் உழவு இயந்திரங்களைச் செலுத்துதல் ஆகியவை உட்படப் பல விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டது.

### -உருத்திரபுரம் சன சமூக நிலையத்தில்

# தேசிய வாசிப்பு மாதத்தில் இரவல் வழங்கும் பகுதி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தேசியவாசிப்பு மாத நிகழ்வினையொட்டி நூல்கள் அன்பளிப்பும், இரவல் வழங்கும் பகுதி ஆரம்பித்தலும் என்ற நிகழ்வு இன்று கிளி. உருத்திரபுரம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வானது மாலை 3.00மணிக்கு மு.சண்முகராசா தலைமையில் நடைபெறும். இதில் அன்பளிப்பு நூல்களை கையேற்கும் நிகழ்வுடன், இரவல் வழங்கும் பகுதி ஆரம்பித்தலும் பேராளர்களை இணைக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

### காலம் கடந்த பதிவுகளை மேற்கொள்ள நடமாடும் சேவை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் இதுவரை காலமும் விவாகப் பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொள்ளாத மக்களின் நன்மை கருதி அதே இடத்தில் நடமாடும் சேவை எதிர்வரும் 29.10.2004 அன்று அனிஞ்சியன்குளம் அகலியா முன்பள்ளி மண்டபத்தில் பிறப்பு இறப்புப் பதிவுகள் மேற்கொள்ள இருப்பதால் அனிஞ்சியன்குளம் தேறாங்கண்டல் ஜயங்கன்குளம் பகுதிகளில் உள்ள மக்கள் தங்கள் விவாக பிறப்பு இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளும் படி துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிக்கின்றார். (24)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு தே.எ.பே. மாதாந்தச் சங்கமம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாங்குளம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கமம் கடந்த 21ஆம் திகதியன்று மாங்குளம் மகாவித்தியாலயத்தில் மாங்குளம் பிரதேச கோட்டச் செயலாளர் தலைமையில் ஆரம்பமானது. பொதுச ஈகச் சுடரினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் வி.இலக்கியன் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை மாங்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அணியழகன் ஏற்றினார். கருத்துரைகளை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் சஜ்ஜீவன் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் வி.இலக்கியன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். (20,08)

# யாழ். மாவட்ட பாடசாலைகளில் நூலக வாரம் கடைப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் ரீதியாக உலகநூலக வாரத்தை சிறப்பான முறையில் கடைப்பிடிப்பதற்கு தமிழீழ மாணவர் அமைப்பும்,வலயக்கல்வி திணைக்களங்களும் இணைந்து நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

அந்த வகையில் பாடசாலைகளில் இன்று தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை இந் நூலகவாரம் கடைப் பிடிக்கப் படவுள்ளது.மாணவர்கள் மத்தியில் நூல்களை சேகரித்துப் பேணிப் பராமரிக்கும் பழக்கத்தையும், வாசிப்பு பழக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் கடைப்பிடிக்கப்படும் இவ் வாரத்தில்.

கவிதை மற்றும் கட்டுரை இலக்கிய போட்டிகளும் பாடசாலை மட்டத்திலான நூலக கண்காட்சிகளும் இடம்பெறும். (33)

# மின்சாரம் இல்லாத கிராமங்களின் ஆசிரியர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணைய் வழங்குக

### - தமிழர் ஆசிரியர் சங்கம் அரசிடம் கோரிக்கை

(திருகோணமலை)

மின்சாரமே இல்லாத கிராமங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணைய் வழங்குவதற்கு அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர் மற்றும் மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் ஆகியோரைக் கேட்டுள்ளது.

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணைய் விநியோகம் செய்ய அரசாங்கம் சம்மதித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

"சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணைய் வழங்கும் திட்டம் போன்று, மின்சார விநியோகம் இல்லாத குக் கிராமங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மானிய விலையில் மண்ணெண்ணைய் வழங்கப்பட வேண்டும்" இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.வடக்கு- கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள கிராமங்கள் பல இன்னும் மின்சாரத்தையே காணவில்லை.


அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள், இரவு நேரங்களில் பாடங்களை மண்ணெண்ணைய் விளக்கின் ஒளியில் தான் தயாரிக்க வேண்டியுள்ளது. மலையகத்திலும் இதே நிலை பல இடங்களில் காணப்படுகின்றது.எனவே இவ்வாறான நிலைக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் மொழி பேதமின்றி மானிய விலையில் மண்ணெண்ணைய் விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கோரியிருப்பதாக பொதுச் செயலாளர். த.மகாசிவம் தெரிவித்தார்.(25)

### முக்கிய கூட்டம்

யாழ். ஊர்காவற்துறை பிரதேச அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று நாளை முற்பகல் 10.00மணியளவில் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெறும்.

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை, மற்றும் இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட இப் பிரதேச அபிவிருத்தி குறித்து ஆராயும் இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவர்க்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (33)

### தேசிய மட்டத்தில் முதலிடம்



2004ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டத்தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியின் மு/யோகபுரம் ம.வி. சேர்ந்த செல்வன் சண்முகநாதன் ஜெயந்திரன் பிரிவு 05 பாவோதல் நிகழ்வில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்று வெற்றியீட்டி பாடசாலைக்கு பெருமை தேடித்தந்துள்ளார். (24)

# வெள்ளைப்பிரம்பு தினம் வவுனியாவில் கடைப்பிடிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு செய்த சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வுகள் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 8.30 மணியளவில் வவுனியா பொது வைத்தியசாலை முன்பாக ஆரம்பமான பேரணி கண்டிவீதி ஊடாக நகரசபை மண்டபத்தை வந்தடைந்ததும் அங்கு வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் வீ.சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (10)

# 2005 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திகதிகள்

(வவுனியா செய்தியாளர்)

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 2005 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்கப்பட உள்ள திகதிகளை ஓய்வூதியத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.இதன் அடிப்படையில் திகதிகள் ஜனவரி-12,பெப்ரவரி-10, மார்ச்-10, ஏப்ரல்-07, மே-12,யூன்-09, யூலை-12, ஓகஸ்ட்-11, செப்டெம்பர்-08, ஒக்டோபர்-06, நவம்பர்-10, டிசம்பர்-08 எனத் தெரிய வந்துள்ளது. (10)

# திருமலை சிறைச்சாலையில் எயிட்ஸ் விழிப்புணர்வு நாடகம்

(திருகோணமலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலை சிறைச்சாலையில் எயிட்ஸ் விழிப்புணர்வு நாடகம் ஒன்றை நேற்று நடத்தியது. இலங்கை செஞ்சிலுவைச் சங்க திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவர் டாக்டர் இ.ஜி.ஞானகுணாளன் எயிட்ஸ் பரபுவதைத் தடுப்பது பற்றிய விளக்கவுரையை வழங்கினார். இலங்கையில் இதுவரை எயிட்ஸ் நோயினால் 572 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் கடந்த வருடம் புதிதாக .3பேர் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று டாக்டர் ஞானகுணாளன் தனது பேச்சில் குறிப்பிட்டார் முதலாவது எயிட்ஸ் நோயாளி 1962இல் இனங்காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர் எஸ்.எச். நிமால்குமார் திருகோணமலை சிறைச்சாலையின் பிரதம சிறையதிகாரி பண்டாரா செஞ்சிலுவைச் சங்கத் திருமலை மாவட்டக் கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் • மணிவண்ணன், எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் தேசிய செயலகப் பணிப்பாளர் பிரேமதிலக ஆகியோரும் பங்குபற்றினர். (25)


## முக்கிய அறிவித்தல்

### மாந்தை கிழக்கு பிரதேச சபை நட்டாங்கண்டல்

மாந்தைகிழக்கு பிரதேசத்திற்திற்கு உட்பட்ட பகுதியில், அரச தனியார் நிறுவனங்களினாலும், தனிப்பட்டவர்களினாலும், கட்டப்படும் எவ்வகையான கட்டிடவேலைகளிற்கும், எமது அனுமதியினை பெற்ற பின்பே வேலைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

திருமதி.சா.ஸ்ரீஸ்காந்தராசா,
விசேட ஆணையாளர்,
மாந்தை கிழக்கு பிரதேச சபை,
நட்டாங்கண்டல்.

(சி-10588)

- யுரேனியத்தை உபயோகிப்பது தொடர்பில் -

# ஐரோப்பிய ஒன்றியத்தின் யோசனையை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமானது

## - ஈரான் வெளிவிவகாரப் பேச்சாளர்

**அணுப்பரிசோதனைக்காக யுரேனியத்தை உபயோகிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த யோசனைகளை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினம் என்று ஈராக் அறிவித்துள்ளது.**

இதன் விளைவாக ஈரான் மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடையை விதிக்கலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஈரான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கசீல் ரேசா அசீஸ் ஈரானின் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார். தீர்மானிக்கப்படாத ஓர் காலவரையறையை யுரேனியம் தொடர்பான பாவனையை ஒத்தி வைக்க ஈரான் தயாரில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த யோசனைகள் சமநிலையற்றவையென்றும் கசீல் ரேசா அசீஸ் தெரிவித்துள்ளார். மேலும் வியட்னாமில் இவ்வார இறுதியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இறுதி ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதாக ஈரானியப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அணுவாயுதக் குண்டுகள் தயாரிப்பது தொடர்பான ஆய்வுகளை நிறுத்திவிடுமாறு ஐரோப்பிய சங்கம் ஈரானைக் கேட்டுள்ளது. எனினும் அபிவிருத்திப் பணிகளுக்காகவே அணுப்பரிசோதனையை மேற்கொள்வதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய சங்கத்தின் இந்த யோசனை ஈரானால் முற்றாக நிராகரிக்கப்படும் பட்சத்தில் அந்த நாடு ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத் தடையை எதிர்நோக்க நேரிடுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



சொயுஸ் விண்கலம் மூலம் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய அமெரிக்க-ரஷ்ய விண்வெளி வீரர்கள் கசகஸ்தானிலுள்ள மருத்துவ முகாமை நோக்கி நடந்துசெல்கின்றனர்

## ஈராக்கில் கார்க்குண்டுத்தாக்குதல் பத்து ஈராக்கிய பொலிசார் பலி

(பலூஜா)

ஈராக்கில் பாக்தாத் நகரில் இருந்து 180 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் அல்-அசாத் என்ற இடத்தில் பொலிஸ் சோதனைச்சாவடி அருகில் நேற்று முன்தினம் காலை கார்க் குண்டு வெடித்தது.இதில் ஈராக் பொலிசார் 10 பேர் [illegible]னார்கள்.மேலும் 5பேர் படுகாயமடைந்தனர். இந்த[illegible] அமெரிக்க ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.[illegible]ம் இந்தக் குண்டு வெடிப்பில் அமெரிக்கர் யாரும் உயிரிழக்கவில்லை .

## சீனப் பாடசாலைகளில் தொடரும் வன்முறை ஆசிரியர், மாணவன் படுகொலை

(பீஜிங்)

சீனாவில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மீது கடந்த சில வாரமாக தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் தலைநகர் பீஜிங் நகரில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் 5வயது மாணவனும்,ஒரு ஆசிரியரும் கொலை செய்யப்பட்டார்கள் கொலை செய்யப்பட்ட மாணவனின் உடல் வோஷிங் மிஷினில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. .அவனது உடலில் காயம் எதுவும் இல்லை .ஆனால் ஆசிரியரின் தலையில் பலத்த காயம் இருந்தது.இது கடந்த சில வாரங்களில் நடந்த 5-ஆவது தாக்குதல் சம்பவமாகும்

# ஈராக்கில் இருந்து பிரிட்டிஷ் படைகளை திரும்ப அழைத்து எனக்கு உதவுங்கள்

## பிரிட்டிஷ் பிரதமருக்கு உருக்கமான வேண்டுகோள்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கடத்தப்பட்ட 'கேர்' சர்வதேச தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் மார்கரெட் ஹாசன் தன்னைக் காப்பாற்றுமாறு பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேருக்கு வீடியோ ஒளி நாடாவில் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"ஈராக்கில் இருக்கும் பிரிட்டிஷ் படைகளை திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள் மீண்டும் படைகளை அனுப்பாதீர்கள் இதுவே எனது கடைசி மணிநேரங்களாக இருக்கும் எனக்கு உதவுங்கள்" என்று தீவிரவாதிகளால் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட வீடியோ ஒளிநாடாவில் கண்ணீர்மல்கக் கூறியுள்ளார். கடத்தப்பட்ட மூன்று நாட்களுக்குப் பின் இந்த வீடியோ ஒளிநாடா அரேபியத் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாகியது. மேற்குப் பாக்தாத்தில் பணிக்குச் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கி முனையில் மார்கரெட் கடத்தப்பட் டார். பிரிட்டனைச் சேர்ந்த கென்னெத பிக்லி என்பவர் கடந்த சில வாரங்களுக்கு முன் ஈராக் தீவிரவாதிகளால் பிணையாளியாகப் பிடிக்கப்பட்டு தலை துண்டிக்கப் பட்டது நினைவிருக்கலாம்.

## 12 ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முந்தைய பறவையின் உடல்பாகம் சீனாவில் கண்டுபிடிப்பு

(பீஜிங்)

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள லியான் ஜிங் என்ற இடத்தில் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பறவையின் உடலுறுப்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்•அது முட்டையில் இருந்து வெளிவந்த குஞ்சு ஆகும்.

மேலும் அது டைனேசருடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்• இது குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

## பலூஜாவில் அமெரிக்க விமானத் தாக்குதல் இரண்டு பேர் பலி மூவர் படுகாயம்

(பலூஜா)

ஈராக்கில் உள்ள பலூஜா நகரில் தீவிரவாதிகள் பதுங்கி இருந்து அமெரிக்க இராணுவத்திற்கு எதிராக தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். இதனால் அந்த தீவிரவாதிகளை ஒடுக்க கடந்த சில வாரங்களாக அமெரிக்கா கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகிறது. போர் விமானங்கள் குண்டு மழை பொழிகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பலூஜா நகர் மீது அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசின. இதில் 02 பேர் கொல்லப்பட்டனர், 03 பேர் படுகாயம் அடைந்தனர் முன்னதாக தீவிர சோதனை நடத்தி 17 பேரை சிறை பிடித்தனர். பாக்தாத் நகரில் உள்ள விமான நிலையத்தை நோக்கி அமெரிக்க டாங்கிகள் சென்று கொண்டிருந்தபோது குண்டு வெடித்ததில் ஒரு டாங்கி தகர்க்கப்பட்டது. இதில் அமெரிக்க வீரர்கள் 06 பேர் காயம் அடைந்தனர்.



ஜப்பானில் ஏற்பட்ட புவி நடுக்கத்தில் பாதிப்புற்ற கடைக்கு முன்னால் தனது பேரப்பிள்ளையுடன் நடந்துசெல்லும் ஒருவரையும், பாதிக்கப்பட்ட வீடுகளையும் காணலாம்.

## அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கொலின்பவல் கிழக்காசிய நாடுகளுக்கு நான்கு நாள் விஜயம்

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் கிழக்காசிய நாடுகளுக்கு நான்கு நாள் விஜயமொன்றை நேற்று ஆரம்பித்துள்ளார்.

இவ் விஜயத்தின் போது ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி, மற்றும் வெளிநாட்டமைச்சர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். இதன் போது அமெரிக்கா மாட்டிறைச்சி இறக்குமதியை ஜப்பான் ஓரளவிற்குத் தடை செய்துள்ளமை குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அமெரிக்க, ஜப்பானிய இராணுவக் கூட்டமைப்பு, வடகொரிய அணுவாயுத உற்பத்தித்திட்டம் ஆகியன பற்றியும் ஆராயவுள்ளனர்.



டோக்கியோலிலுள்ள அலுவலகத்தில் பத்திரிகை மாநாடு நடத்தச் செல்லும் அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின்பவலும், அவரது ஜப்பானிய சகாவான கொபுடகாமச்சி மூராவும்.

## குளோனிங் முறையில் மனிதனை உருவாக்கக் கூடாது ஐக்கிய நாடுகள் சபை ஒப்பந்தம் தயாரிப்பு

(நியூயோர்க்)

குளோனிங் மனிதக் கருவை உருவாக்க உலகளாவிய தடைக்கு ஐ.நா• சபை ஒரு தடை ஒப்பந்தத்தை தயாரித்து இருக்கிறது.

ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி ஆகியவற்றை குளோனிங் முறையில் உருவாக்கியுள்ளனர். அதேபோல குளோனிங் முறையில் மனிதனை உருவாக்கக்கூடாது. அதனால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்ற கருத்துள்ளது. இன்னொரு சாரார் பயங்கர நோய்களைக் குணப்படுத்த குளோனிங் முறையை பயன்படுத்தலாம் என்ற கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மனிதக் கருவை உருவாக்க, உலகளாவிய தடைக்கு ஐ.நா சபை ஒரு தடை ஒப்பந்தத்தை தயாரித்திருக்கின்றது. அந்தத் தடை ஒப்பந்தத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். ஐ.நா சபையை நேற்று முன்தினம் அமெரிக்க சனாதிபதி புஷ் நிர்வாகம் வற்புறுத்தியது.

என்றாலும் நவம்பர் 2ஆம் திகதி அமெரிக்க சனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த பிறகுதான் அந்தத் தடை ஒப்பந்தத்தில் அமெரிக்கா கவனம் செலுத்தும் என்று அமெரிக்கத் தூதர் ஒருவர் கூறினாா.

குளோனிங் தடை ஒப்பந்தம் தேர்தல் வெற்றி வாய்ப்பைத் தடுத்துவிடக் கூடாது. என்று சனாதிபதி புஷ் பயப்படுகிறார். ஏனெனில் தடை ஒப்பந்தத்தை வாக்காளர்கள் பலர் எதிர்க்கின்றார்கள். என்றும் அமெரிக்கத் தூதர் ஒருவர் கூறினார். அமெரிக்கத் தலைமையில் உள்ள 63 நாடுகள் மனிதக் கருவை உருவாக்கவும், மருத்துவத துறைக்கு குளோனிங் முறையில் மருத்துவத்துறையில் பயன்படுத்தவும் தடை விதிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது. இந்தியா, ஜப்பான், இங்கிலாந்து, தென் கொரியா, துருக்கி ஆகிய நாடுகள் மனிதனை குளோனிங் முறையில் உருவாக்க மட்டும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றது. மருத்துவத் துறையில் பயன்படுத்த எதிர்க்கவில்லை. 60 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய அமைப்பு, மற்றும் 12 நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க நாடுகள் அமைப்பு, ஆகியவை குளோனிங் மருத்துவத்திற்கு பயனபடுத்தலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறது. புற்று நோய், சர்க்கரை நோய், முதுகுத் தண்டு சேதம ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட கோடிக் கணக்கான மக்கள் பயன் பெற குளோனிங் முறையைப் பயன்படுத்தலாம் என்று அந்த நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன..

## பளையில் குழாய் நீர் விநியோகம் பிரதேச சபையினர் நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

பளைப் பகுதிக்கு நிலத்தடி நீர் விநியோகம் செய்வதற்காக நீர்ப் வேலைத் திட்டத்தின் நிதியுதவியுடன் பளைச் சந்தை வளவினுள் 50 இலட்சம் ரூபா செலவில் நீர்த் தாங்கியும் நிலத்தடி குழாய்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. நீர்த் தாங்கி வேலைகள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பளை அரசினர் வைத்தியசாலை வரைக்கும் மற்றும் புலோப்பளை பகுதிவரை இந்த நீர் விநியோகம் நடைபெறும் என்றும், மேலும் சில பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்காக தாம் சம்பந்தப்பட்டவர்களிடம் பணம் கேட்டிருப்பதாகவும் பணம் கிடைத்தால் அந்தப் பகுதிக்கும் தாம் நிலத்தடிக் குழாய்களைப் புதைத்து நீர் விநியோகம் செய்வோம் என்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினர் தெரிவிக்கின்றனர். (11)

## பூநகரிப் பிரதேச கிராமங்களில் நோய்த்தடுப்பு நடவடிக்கை முன்னெடுப்பு

(பூநகரி)

அண்மையில் பெய்த பெருமழையின் காரணமாக பூநகரியின் வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில், கறுக்காய்த்தீவு ஆகிய இடங்களில் ஏற்பட்ட வயிற்றுளைவு நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கைகள் தமிழீழ சுகாதார சேவையின் அனுசரணையுடன் பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 14,15,16,17 ஆகிய நான்கு நாட்களிலும் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களில் வீட்டுத்தரிசிப்பை மேற்கொண்டு 14ஆம் திகதி 12பேரும், 15ஆம் திகதி 8பேரும், 16ஆம் திகதி 04பேரும் நோய் தொடர்பாக இனங்காணப்பட்டு அதற்குரிய வைத்தியசிகிச்சை அளிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக கறுக்காய்த்தீவு கிராமத்தில் 19,20,21,22 ஆகிய நான்கு நாட்களும் வீட்டுத் தரிசிப்பும் தடுப்பதற்கான ஆலோசனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன்போது 19ஆம் திகதி 19 பேரும், 20ஆம் திகதி 05பேரும், 21ஆம் திகதி 06பேரும், 22ஆம் திகதி ஒருவரும் இனங்காணப்பட்டதுடன் அவர்களுக்குரிய சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 5வயசி[illegible]துட்பட்டோரும், கர்ப்பிணி மாருப[illegible] எட்டுப்பேர் பூநகரிகட்டம[illegible]தியசாலைக்கு அனுப்பப்ப[illegible] தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இச் செயற்பாட்டின்போது பூநகரி பொதுச் சுகாதார பரிசோதகர் சந்திரசேகரம் தமிழீழ சுகாதாரசேவை பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் அஜன் மற்றும் இப்பகுதி சுகாதாரத் தொண்டர்கள் எனப் பலர் கலந்து தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (34)

# கிளிநொச்சி, முல்லை மாவட்ட பிரதான வீதிகளின் புனரமைப்புக்கு 10 வீத நிதிகூட கிடைக்கவில்லை!

### நிக்கொட் திட்டப் பணிப்பாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பிரதான தார் வீதிகளைப் புனரமைக்க கோரப்பட்ட நிதியில் 10 வீதமான நிதிகூட இதுவரைகிடைக்கப்பெறவில்லையென நிக்கொட் திட்டப் பணிப்பாளர் த. இலங்காநேசன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இடம்பெற்ற புதிய பாலத்திறப்பு விழாவில் நிக்கொட் திட்டப் பணிப்பாளர் த. இலங்காநேசன் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள 290 முதல் 300 கிலோ மீற்றர் தூரமான முன்னைய தார் வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 500 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்ற பொழுதிலும் மேற்படி வீதிகளைத் திருத்தி அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபா நிதிகூட இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

தற்போது இம்மாவட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள குறைந்த பட்ச நிதியினைக் கொண்டே தற்போதைய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. தேவைக்கேற்ற வகையில் நிதிகள் கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே இம் மாவட்டங்களின் புனரமைப்புப் பணிகளை முற்று முழுதாக நிறைவேற்ற முடியும்.

இந்த வகையில் இம்மாவட்டங்களில் முக்கிய பாலங்கள் அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பாலங்களும், முல்லை மாவட்டத்தில் மூன்று பாலங்களும் அமைக்கப்பெற்றுள்ளமையினையிட்டு பெருமை கொள்வதுடன் பலத்த சிரமங்களுக்கு முகம்கொடுத்து மேற்படி பால வேலைகளைப் பூர்த்தி செய்தஒப்பந்தக்காரர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து 1650 மில்லியன் ரூபாய் நிதியினையும் சுவிஸ் இடம் இருந்து 500 மில்லியன் ரூபா நிதியுதவியினையும் எதிர்பார்த்துள்ளோம். மேற்படி நிதிகள் கிடைக்கப் பெற்றதும் இம்மாவட்டங்களின் முக்கியபுனரமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் தெரிவித்தார். (சோ)


## 2500 வறிய குடும்பங்களுக்கு கூரைத் தகடுகள் விநியோகம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலர்பிரிவுகளில் வெள்ளிக்கிழமை 2500 வறியகுடும்பங்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கூரைத்தகடுகள் விநியோகம் செய்யப்பட்டன.

முக்கிய நிகழ்வு கந்தளாய் பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம் பெற்றது. ஏனைய பிரதேச செயலர் அலுவலகங்களிலும் வைத்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குக் கூரைத்தகடுகள் அவ்வப் பிரதேச செயலர்களால் வழங்கப்பட்டன.

திருமலை நகர பிரதேச செயலகத்தில் வைத்து 235 சிங்களக் குடும்பங்களுக்கும், 230 தமிழ் குடும்பங்களுக்கும், 150 முஸ்லிம் குடும்பங்களுக்கும் இலவச கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன. திருமலை பதில் பிரதேச செயலர் திருமதி ஜலதீபன் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார். (25)



வெளிநாட்டிலிருந்து அன்பளிப்பு செய்யப்பெற்ற சிறார்களுக்கான உடுபுடவைகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறார்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கையளித்தார். இதனைப் பெற்றுக்கொண்ட சிறார்களை படத்தில் காணலாம். (படம் :- சோதி)

## பிற மாவட்ட மாணவர்களின் வருகையால் மன்னார் மாணவர் கல்விநிலை பாதிப்பு!

### அரச அதிபர் தலைமையில் ஆராய்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக கடந்த புதன்கிழமை அரச அதிபர் தலைமையில் புனித சவேரியார் தேசிய ஆண்கள் கல்லூரியில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

"பிற மாவட்ட உயர்தர வகுப்பு மாணவர்களின் வருகையும், நிர்க்கதியாகியிருக்கும் மன்னார் மாவட்ட மாணவர்களின் எதிர்காலமும்" எனும் தலைப்பில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்கள் பிரதிநிதிகள், பெற்றோர்கள் அதிபர்கள் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதனடிப்படையில் மன்னார் மாவட்ட மாணவர்களின் நலனைக்கருத்திற் கொண்டு மன்னார் கல்வித்திணைக்களம், பாராளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் மாவட்டத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பொறுப்பதிகாரிகளும் இந்நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று வலியுறுத்தியதுடன் இதற்கென ஓர் அமைப்பினையும் தெரிவு செய்துள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட வெட்டுப் புள்ளியைப் பயன்படுத்தி பல்கலைக்கழகம் செல்லும் வெளி மாவட்ட மாணவர்களின் செயலைக் கண்டித்து மன்னார் அதிபர்கள் சங்கம் ஆட்சேபனை மனுவொன்றை வடக்கு கிழக்கு கல்வியமைச்சிற்கும், மன்னார் அரசாங்க அதிபர், மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப், மன்னார் பிரஜைகள் குழு போன்றவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

இவர்களது இச்செயற்பாட்டினால் மன்னார் உயர்தர மாணவர்களின் கல்விபெரிதும் பாதிப்படைந்துள்ளது என்றும், இதனை இனி மேல் எம்மால் அனுமதிக்க முடியாதென்றும் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அந்தமகஜரில்குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீதிகள் நீரில் மூழ்கின

(மன்னார்)

மன்னாரில் கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக இடியுடன் கூடிய மழை பெய்துள்ளது இதனால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின மன்னார் பகுதி வீதிகளில் நீர்வடிப்புக்கு உரிய சீரான செயற்பாடுகள் இல்லாமையே இதற்கு காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர்(மி)

## வன்னியில் சிரித்திரன் சஞ்சிகையின் மீள் வருகை அறிமுகவிழா நாளை

(அலுவலக செய்தியாளர்)

சிரித்திரன் சஞ்சிகையின் மீள் வருகை அறிமுக விழா நாளை 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓவியர் ராஜன் தலைமையில் அன்றையதினம் பிற்பகல் 4.00 மணிக்கு மேற்படி அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)




கிளிநொச்சி வலய மட்டத்திலான நாடகப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்ற கிளி. பாரதி வித்தியாலய மாணவர்களின், விமலேஸ்வரன் ஆசிரியர் நெறியாழ்கையில் உருவாக்கப்பட்ட "கீழ்மை என்றும் வேண்டுவோம். போ... போ..." என்ற நாடகத்தின் சில காட்சிகளைப் படத்தில் காணலாம். (படங்கள் :- வரன்)

# மனிதாபிமான பணி மேற்கொள்ளும் இடத்தில் படுகொலைகள் இடம்பெற அனுமதிக்க முடியாது

**-யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகன்**

(நல்லூர்)

**மனிதாபிமானப் பணியை மேற்கொள்ளும் இடத்தில் படுகொலைகள் இடம்பெற அனுமதிக்க முடியாது. எதிர்காலத்தில் கூட இத்தகைய சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கக் கூடாது. இவ்வாறு யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண போதனா வைத் தியசாலையில் இந்திய இராணு வத்தால் படுகொலை செய்யப் பட்ட போதனா வைத்தியசாலை ஊழியர்களின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் யாழ். போதனா வைத்தியசாலை எழுது வினைஞர் க.பீரிஸ் தலைமையில் கடந்த வியாழனன்று இடம் பெற்றது.

அவ்வேளை அவர் மேலும் தெரிவிக்கையில், நோயாளர்க ளின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய வைத்தியசாலையி லேயே வைத்தியர்கள், தாதியர் கள், ஊழியர்கள் என்ற வேறுபாடு கள் எதுவுமின்றி அவர்களுடைய உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய செயலை நாகரிகம் மிக்க உலகில் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இத்தகைய செயலை வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

மனிதாபிமானப் பணியை மேற்கொள்ளும் இடத்தில் படு கொலைகள் இடம்பெற அனும திக்க முடியாது. எதிர் காலத்திலும் கூட இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கக் கூடாது. இதற்கு எதிராக நாம் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் உரையாற்றுகையில்,

இந்திய இராணுவம் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட படுகொலைகளை தமிழ் மக்கள் என்றும் மறக்க மாட் டார்கள். இப்படுகொலைகள் இந்திய இராணுவத்தின் கொலைவெறியை எடுத்துக் காட்டுவதுடன் தமிழர் களை அழிக்க வேண்டும் என்ப தில் எவ்வளவு உறுதியாக இருந் துள்ளார்கள் என்பதையுமே எடுத் துக் காட்டுகின்றது.

வைத்தியசாலையில் இடம் பெற்ற வைத்தியசாலை ஊழியர் கள், பொதுமக்களின் படுகொலை யானது எவராலும் மறக்கக் கூடி யதும் அல்ல, மறைக்கக்கூடியதும் அல்ல. தமிழன் இம்மண்ணில் வாழும்வரை இப்படுகொலைகளும் மறக்கப்படாமல் இருந்தே வரும்.


இக்கட்டான காலகட்டத்தில் மனிதாபிமானப் பணிகளில் ஈடு பட்டுவந்த வைத்தியசாலை ஊழி யர்கள் படுகொலை செய்யப்பட் டுள்ளமையை எந்தவொரு மனித இனமும் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

நோயாளர்களுக்கு உதவி செய்யவும் உயிரைக்காப்பாற்ற வும் வந்த வைத்தியசாலை ஊழி யர்களையே மனிதாபிமானம் எதுவும் இன்றி வைத்தியசாலைக் கட்டடத்தினுள் வைத்துச்சுட்டுக் கொன்றமை பெரும் துரோகத்த னமான செயலாகும் எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் ம.கிருஷ்ணா, வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் க.பத்ம நாதன், தாதிய உத்தியோகத்தர் திருமதி.பு.கணபதி, மில்க்வைற் தொழில் அதிபர் இ.தவகோபால் ஆகியோரும் உரையாற்றி னார்கள். (41)

### 5000 பனம் விதை நடுகை

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் 5000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் அனுசரணை வழங்கியிருக்கிறது. (33)



யாழ். மருத்துவ மனையில் இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவு நிகழ்வில்....

# சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்க ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் அபாயம்!

(தென்மராட்சி)

வரணி சமுர்த்தி வங்கிச் சங்கக்கட்டடம் கட்டுவதற்கு ஒதுக் கப்பட்ட ரூபாய் ஒருஇலட்சம் நிதி அதிகாரிகளின் அசமந்தப்போக்கி னால் மீண்டும் திரும்பும் அபாயம் எழுந்துள்ளதாகத் தெரியவரு கிறது.

2003ஆம் ஆண்டு வரணியில் சமுர்த்தி வங்கிச் சங்கக் கட்டடம் கட்டுவதற்கு வரணி வடக்குப் பிரிவில் உள்ள ஒருவரால் காணி இனாமாக வழங்கப்பட்டது. ஆனால் அந்த இடம் கிராம அலுவலர் பிரிவுக்கு மத்திய நிலைய இட மாக இல்லாதது என மக்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து வரணி மகாவித்தியாலயம் அருகே காணி ஒன்றை வழங்க அப்பகுதி மக்கள் முன்வந்த போதும் அதிகாரிகளின் அசட்டை யீனத்தால் இதுவரை இவ் இடத் தில் கட்டடம் கட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவும் தெரியவருகிறது.

இதனால் வங்கிக்கட்டடம் அமைக்க ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச்செல்லும் அபாயம் எழுந் திருப்பதாகத் தெரியவருகிறது. உடனடியாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் கூடுதல் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர். (28)

# கடற்றொழிலில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்த ஜப்பான் அரசு நடவடிக்கை

**-கடற்றொழிலாளர் குழு விரைவில் ஜப்பான் பயணம்**

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு கடற்றொழி லாளர்களுக்கு கடற்றொழில் சார் நுட்பங்கள் அடங்கிய பயிற்சி களை வழங்க ஜப்பான் அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டில் கணிசமான அளவு கடற்றொழிலாளர்கள் வாழ் கின்றபோதும் அரசாங்கம் அவர் களின் தொழிற்துறைசார் அபி விருத்தி நடவடிக்கைகளுக்கான உதவிகள், பயிற்சிகள் எதனையும் வழங்குவதில்லை.

இதனால் பின்தங்கிப் போயி ருக்கும் குடாநாட்டு கடற்றொழிலா ளர்களது தொழில்சார் அபிவிருத் திகளை மேம்படுத்தும் நோக்கி லேயே ஜப்பான் அரசு இத்த கைய பயிற்சி வழங்கல் உதவி களை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தினடிப்படையில் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த கடற் றொழிலாளர்கள் குழு ஒன்று ஜப் பானிற்கு அழைத்துச் செல்லப்பட விருக்கிறது.

இவ்வாறு ஜப்பான் அரசின் அனுசரணையுடன் அழைத்துச் செல் லப்படும் மீனவர்குழு அந்நாட்டின் கடற்றொழில் துறைசார் தொழில் நுட்ப முறைகளை அறிந்து கொண்டு மீண்டும் நாடு திரும்பி யதும் அக்குழுவினர் குடாநாட்டில் தாம் அறிந்து வந்த ஜப்பானிய கடற்றொழில் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வர். (33)

# சுழிபுரம் தபாலகத்திற்கு அடிப்படை வசதிகள் தேவை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் தபாலகம் நீண்ட காலமாக அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

மேற்படி தபாலகத்தில் 10 இற்கும் மேற்பட்ட பதவி வெற் றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாத நிலையில் காணப்படுவதுடன் இங்கு உரிய தளபாட வசதிகள், இடவசதிகள் என்பன இல்லாத நிலை காணப்படுவதால் இப்பகுதி வாழ் மக்கள் தமக்கான தபால் சேவையை திருப்திகரமாகப் பெற முடியாத நிலை காணப்படுகிறது. (33)

*-தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு-*

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொது மக்கள் தொடர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன் னிட்டு கோப்பாய் மாவீரர் துயி லும் இல்லப் பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. இச்சிரமதானப் பணிக ளில் தேசிய எழுச்சிப் பேரவை யினர், மாணவர்கள், பொது மக்கள எனப் பலரும் ஈடுபட்டு வருகின்ற னர்.

இதேவேளை நவம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை மிகச் சிறப்பான முறையில் மாவீரர் தினவாரத்தை அனுஷ் டிக்கவும் ஏற்பாடுகள் செயயப்பட் டுள்ளன. இதற்கான நிகழ்வுகள் பிரதேச ரீதியாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. (33)

# வாகனக் கொள்ளை தொடர்பில் கைதான மேஜர் உள்ளிட்ட மூவருக்கு விளக்க மறியல்

**-குற்றச் செயல்கள் பல குறித்தும் முறைப்பாடு**

(கொழும்பு)

கண்டியில் அண்மையில் வாகனக் கொள்ளை ஒன்று தொடர் பில் கைது செய்யப்பட்ட இராணுவ மேஜர் உட்பட்ட மூவர் கடந்த வெள்ளியன்று தெல்தெனிய நீதிமன றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை மேலதிக விசா ரணைக்காக எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். இந்த மூவரும் நீதிமன் றத்தில் ஆஜர்செய்யப்பட்ட வேளை யில் அங்கு பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அதேநேரம் பாதுகாப்புக் கருதி வழக்கு விசாரணை நடை பெறும் போது பார்வையாளர்கள் அனைவரும் நீதவானின் உத்தர வின் பேரில் வெளியேற்றப் பட்டனர்.

இதற்கிடையில் ஆஜர் செய் யப்பட்ட மூவரும் நாட்டில் உள்ள பத்துப் பொலிஸ் நிலையங்களில் கொலை,கொள்ளை மற்றும் வீடு டைப்புப் போன்ற குற்றச்சாட் டுக்கள் தொடர்பாக தேடப்பட்டவர் கள் என்ற தகவலும் புதிதாக வெளியாகியுள்ளது.

# கோயிலாமனையில் படையினரை அகற்றி அடிப்படை வசதிகளை விரைந்து ஏற்படுத்துக!

**-பிரதேச செயலருக்கு மக்கள் வேண்டுகை**

(தென்மராட்சி)

அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமல் கடந்த 15 வருடங்க ளுக்கு மேலாக மிகவும் பின் தங் கிய நிலையில் உள்ள கோயிலா மனை கிராமத்தில் உடனடியாக அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்ள துரித கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தென்மராட்சி பிரதேச செயலாளர், தென்மராட்சிப் பிரதேச சபை செய லாளர் போன்றவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

106 குடும்பங்களைக்கொண்ட இக்கிராமத்தில் 80 சதவீத மக்கள் விவசாயிகள் ஆவர். இவர் களுடைய விளைநிலங்களில் பதி னாறு ஹெக்ரேயர் நிலப்பரப்பில் கடந்த 5 வருடங்களாக இராணு வம் முகாம் அமைத்துள்ளதால் இம் மக்கள் அரச நிவாரணத்தை நம் பியே வாழ்க்கை நடத்தி வருகின் றனர். கடந்த கால யுத்தம் காரண மாக பெருமளவு வீடுகள் அழிக் கப்பட்டும், வீதிகள் சனசமூக நிலை யங்கள், முன்பள்ளி, மயானம் முதலிய அடிப்படைக் கட்டுமானங் கள் இடந்தெரியாமல் அழிக்கப் பட்டும் உள்ளன. விவசாய நிலங்க ளில் உள்ள கேணிகள் தூர்க்கப் பட்டும் விளைநிலங்கள் மண் அணைகளாகவும் மாற்றப்பட்டுள்ள தால் இவற்றை அவசரகால நட வடிக்கையாகப் புனரமைக்க மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (28)

# தேர்தல் முறையில் சீர்திருத்தம் தெரிவுக்குழு அமைக்க வலியுறுத்து

(கொழும்பு)

தற்போதைய தேர்தல் முறை யில் சீர்திருத்தம் ஏற்படுத்து வதைக் கருத்திற் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய பிறி தொரு தேர்தல் சீர்திருத்தத்திற் கான பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிப்பதற்கும் பிரேரித்துள்ளார்.

இப்பிரேரணை பாராளுமன்ற முன்னறிவித்தற் பத்திரத்திலும் இடம்பெற்றுள்ளது. இப்புதிய தெரிவுக்குழு 21 அங்கத்தவர் களை உள்ளடக்கியதாக இருக்கும.

இப்புதுக்குழு மேலதிகமாகத் தற்போதைய பாராளுமன்ற உள்ளூராட்சி வாக்கெடுப்பில் சீர் திருத்தத்தை ஏற்படுத்துவதைக் கருத்திலெடுப்பதோடு சட்டத்தில் ஏதாவது திருத்தத்தையும் சிபார்சு செய்யும்.

# கடலுணவு பதனிடும் நிலையம் வேலணையில் 27இல் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் உள்ள வேலணைப் பகுதியில் உலக உணவு ஸ்தாபனத்தின் 15 மில்லியன் ரூபா நிதி உதவியில் கடலுணவு பதனிடும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


மேற்படி பிரதேசத்தில் சிறந்த கடலுணவு பதனிடும் நிலையம் இன்மையால் இப்பகுதி மீனவர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுகளைச் சந்தைப்படுத்தி சிறந்த இலாபமீட்ட முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் அப்பகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பின்னடைவுகளைக் கவனத்தில் கொண்டு அமைக்கப்பட்ட இக்கடலுணவு பதனிடும் நிலையம் எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (33)

# ரணில்-டிக்ஸிற் ரகசிய சந்திப்பு

# இருவரும் பேசிக்கொண்டதென்ன?

கடந்த வாரம் இரு முக்கிய பிரமுகர்களுக்கிடையில் தீவிர சந்திப் பொன்று நடைபெற்றுள்ளது. அச் சந்திப்பு சிறிலங்காவின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க, முன்னாள் சிறிலங்கா வுக்கான இந்தியத் தூதுவருமான டிக்ஸிற் இருவருக்குமிடையிலான சந்திப்பாகும். டிக்ஸிற் என்பவர் இந்நாட்டு இனப்பிரச்சினை தொடர்பில் பங்கேற்றவர்களில் தற்போது உயிருடன் இருக்கும் ஒருவராவார். அதாவது இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் தொடர்புடையவராவார். இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பொருத்தமான வாய்ப் புக்களை ஏற்படுத்திய வர்களில் ஜே.ஆர், ராஜீவ்காந்தி, காமினி திசாநாயக்க ஆகியோர் அடங்குவர். எனினும் தற்போது உயிருடன் இருப்பவர் டிக்ஸிற்மட்டுமே. இவரைச் சந்தித்த ரணிலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியவரே.



ரணிலுடன் டிக்ஸிற்

அவர் ஏற்படுத்திய வாய்ப்புக்கள் இரண்டு. அதனைத் தடுத்து நிறுத்தியவர்கள் ஜே.வி.பியினரே.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட டிக்ஸிற் இந்திய இராணுவத்தை வரவழைத்தது இனப்பிரச்சினையைத் தீர்க்கவே. ஒப்பந்தத்தின்படி மாகாண சபை முறையை ஏற்படுத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்க எண்ணினார்.

எனினும் ஜே.வி.பி யினர் இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுத்து ஆசியப் பிராந்தியத்தில் தமது செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள முயற்சிப்பதாகப் புரளியைக் கிளப்பியது. இதனால் இந்திய அரசின் முரண்பாட்டிற்கு இலக்காகியது. இந்தியப் பொருட்களை வாங்குவோர் தண்டிக்கப் படுவர் என்றும் மாகாணசபைக்கு ஆதரவு தெரிவிப்போர் தண்டிக்கப்படுவர் என்றும், அது பிரசுரங்கள் மூலமும், ஆர்ப்பாட்டங்கள் மூலமும் அறிவித்தது. மாகாண சபை முறையால் நாடு பிளவு படப்போவதாக வரைபடம் வரைந்து காட்டி சிங்கள மக்களைத்தூண்டியது.

எனினும் மாகாணசபை முறையை விடுதலைப்புலிகள் ஏற்காததால் அவர்களுக்கெதிராக இந்திய இராணுவம் போரைத்திணித்து யுத்தத்தின் மூலம் புலிகளை அழித்துவிட முனைந்த போது இந்திய இராணுவம் நாட்டை ஆக்கிரமிக்க வந்துவிட்டதாக ஜே.வி.பி தெரிவித்தது.

இதன் காரணமாக ஜே.ஆர் குழப்பநிலைக்கு உள்ளானார். இதனால் 1988 ஆம் ஆண்டு பிரேமதாச சனாதிபதித் தேர்தலின் போது இந்தியஇராணுவத்தை வெறுக்க நேரிட்டது. அதற்குக் காரணம் பிரேமதாச சனாதிபதியாகப் பதவியேற்றதும் ஜே.வி.பி பலவழிகளில் அப்போதைய அரசிற்கு அழுத்தம் கொடுத்தமையாகும். இந்திய இராணுவத்தை நாடு கடத்தும் வரை ஜே.வி.பி பல ஆர்ப்பாட்டங்களையும், ஒருவித ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்து அரச இயந்திரத்தை முடக்கியது. பின்னர் இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டது. இந்திய, இலங்கை ஒப்பந்தமும் செயலிழந்தது.

ஜே.வி.பியினது இந்த நடவடிக்கை காரணமாக இனப்பிரச்சினை மீண்டும் வலுவடைந்தது. விடுதலைப்புலிகளும் முன்னரை விடப் பலம் பெற்றனர். அத்துடன் மாகாணசபை அதிகாரத்தையும் மீறி இடைக்கால நிர்வாகத்தைக் கோரும் அளவிற்குச் சென்றுவிட்டனர். தீர்வு காணப்பட வேண்டிய தருணம் அண்மித்த வேளை ஜே.வி.பியினர் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதால் சந்தர்ப்பம் நழுவி விட்டது. அதன் பின்பு டிக்ஸிற் எழுதிய நூலில் விடுதலைப் புலிகள் வடக்குகிழக்கு மட்டுமன்றி முழுநாட்டையும் ஆக்கிரமிக்கும் நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இவ்வாறான காலப்பகுதியிலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினார். அத்துடன் கொடூர யுத்தத்திற்கு முடிவு கண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அவர் விரும்பினார்.

தனக்கென வடக்கு கிழக்கு முழுவதும் ஒருபொலிஸ், நீதிமன்றம் என்பவற்றைக்கொண்ட ஒரு அமைப்பினருடனேயே ரணில் பேச்சு நடத்தினார். எனினும் அவர் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் ஒருவரின் உதவியுடன் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டை நெருங்கியிருந்தார். அவர் ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாகத்தை வழங்கத் திட்டமிட்டார். அந்நடவடிக்கைகள் ஒஸ்லோ, நோர்வே மாநாடுகள் மூலம் அவர் அறிமுகப்படுத்தினார். இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. ஆனால் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தூண்டி விட்டு சமாதான உடன்படிக்கை மூலம் ரணில் நாட்டைப் பிரிக்கப் போகிறார் என்றும் இடைக்கால நிர்வாகம் தனியரசு என்பதாகும் என பரப்புரை செய்து ரணில் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்தது. முன்னாள் மாகாணசபை முறைகளுக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த ஜே.வி.பி தற்போது இந்தியாவின் ஆதரவுடன் மாகாணசபை அதிகாரத்தை வழங்கலாமென ஆலோசனை கூறுகின்றது. ஜே.வி.பி அன்று மாகாண சபையை எதிர்த்ததைச் சிங்களவர்களும் மறந்து விட்டனர். ஆனால் ரணில் நாட்டைப் பிரித்துக் கொடுக்கப் போகிறார் என்று பிரச்சாரம் செய்யும் போது கலவரப் படுகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தனது யோசனைகளைப் புலிகளிடம் முன்வைத்தார். அதனைப் புலிகள் ஆட்சேபித்து தமது யோசனைகளை முன்வைத்தனர். இது தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களைப் பேச்சுக்கள் மூலம் ஆலோசிக்கலாம் என்றும் ரணில் கருதினார்.

இதற்கிடையில் ஜே.வி.பியும் சந்திரிகாவும் இணைந்து நடத்திய நாடகத்தினால் ரணில் அரசு கவிழ்ந்தது. பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் விடுதலைப்புலிகள் பல்வேறு நன்மையைப் பெற்றனர். விடுதலைப் புலிகளின் யோசனைகளை தமிழ் மக்கள் ஒருமனதாக அங்கீகரித்தனர். அது தனதுஉறுப்பினர் 22 பேரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியதன் மூலம் உறுதி செய்யப்பட்டது.

ரணில் அரசைக் கைப்பற்றிய சந்திரிகா அரசு அவரின்- யோசனைகளை நீக்கிவிட்டு புதிய யோசனைகளை முன்வைத்தது. இதற்கும் புலிகள் மறுப்புத் தெரிவித்த நிலையில், ரணில் அத்திவாரமிட்ட பேச்சுக்களை அடிப்படையாகக் கொண்டே சந்திரிகாவும் பேச்சுக்களை முன்வைக்க நினைக்கிறார்.

ஆயினும் சந்திரிகா கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. யின் தற்போதைய நிலை இந்தியாவின் மத்தியஸ்தத்தை அணுகி மிக்கபலம் பொருந்திய நிலையில் உள்ள விடுதலைப்புலிகளைப் பலமிழக்கச் செய்யும் ஒரு தந்திரோபாயத்தைக் கொண்டுள்ளதை மறுக்க முடியாது.

ஒரு அரசு விடுதலைப் போராளிகளின் கோரிக்கைகளை மறுத்து தான் ஒரு தீர்மானத்தைத் திணிப்பது எந்த ஒரு நாட்டிலும் நடைபெற முடியாது. போராளிகளின் யோசனைகளுக்கு இணங்கி இரு பிரிவினரும் பேச்சு நடத்தவேண்டும்.

எனினும் சந்திரிகாவிடம் தனியான ஒரு யோசனைத்திட்டம் எதுவும் கிடையாது. அது விடுதலைப்புலிகளின் யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுக்கள் நடத்தவுள்ளது. விடுதலைப் புலிகள் இவ்வாறான ஒருபலம் வாய்ந்த நிலையில் இருப்பதற்கு ஜே.வி.பி.யே காரணம் 1988ஆம் ஆண்டிலும் ஜே.வி.பி. அதனையே செய்தது. இனப்பிரச்சினைத்தீர்வில் டிக்ஸிற் கையாள நினைத்த விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது போன்று ரணிலின் நடவடிக்கைகளுக்கும் அவர்கள் முட்டுக்கட்டை போட்டனர். எனினும் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்காவிலும், இந்தியாவிலும் ரணிலுக்கு நீண்ட தொடர்பு காணப்படுகிறது. அதுபோல டிக்ஸிற்றும் இந்திய அரசியலிலும் பாதுகாப்பிலும் பெரும்பங்கை வகிப்பவராகிறார். ரணில் தற்போது எதிர்க்கட்சித்தலைவராக இருக்கிறார். இவர்களிருவருக்கும் இடையில் சுமார் மூன்று நாட்களாக நடைபெற்ற சந்திப்பு மிக ரகசியமாக நடைபெற்றது. இவர்கள் எதைப்பற்றிப் பேசினார்கள் என்பது இன்னும் சில நாட்களில் வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

**உப்புள் ஜோசப் பர்ணாந்து**
(லங்காதீப)
**தமிழில்:வடிவேல்**

## கண்டாவளைப் பிரதேசத்தில் விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்தில் உணவு விவசாய நிறுவனத்தின் நிதியுதவியுடன் த.பொ.மே. நிறுவனத்தால் 150 விவசாயிகளுக்கு விவசாய உள்ளூடுகள் வழங்கப்பட்டன. மேற்படி நிகழ்வு கடந்த 18ஆம் திகதி புளியம் பொக்கணை கமநல கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. தலா நாலாயிரம் ரூபா பெறுமதியான விதைநெல், உரம் என்பன வழங்கப்பட்டதுடன் இத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும், செயற்பாடுகள் பற்றியும், பிரதேச த.பொ.மே.நி இணைப்பாளர் காசிநாதன், விவசாய போதனாசிரியர் ஆகியோரால் விளக்கம் அளிக்கப் பட்டது. (14)

## திருட்டுக்கள் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் நகரை அண்மித்த பகுதிகளில் தொடர்ந்து திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன. முக்கியமாக ஆலயங்களில் உண்டியல்கள் உடைத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. (மி)

## புதிய சின்னக்குளம் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

ஓமந்தைப்பிரதேசத்தில் அமைந்துள்ள புதிய சின்னக்குளம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் மீண்டும் குடியமர்ந்துள்ள நிலையில் இவர்களின் பொதுத்தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கிலேயே இம்மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. (10)

## மன்னார் உறுமலைக் கடற்பரப்பில் மூன்று ஈழத்தமிழ் அகதிகள் மீட்பு

மன்னார் உறுமலையில் மீனவர்களினால் இறக்கி விடப்பட்ட 3 ஈழத்தமிழ் அகதிகள் சிறிலங்கா கடற்படையினரால் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 20 ஆம் திகதி தமிழ் நாடு இராமேஸ்வரத்திலிருந்து பெண் ஒருவர் உட்பட 3 ஈழத்தமிழ் அகதிகள் மீன்பிடி வள்ளம் ஒன்றில் தாயகம் திரும்பியுள்ளார்கள்.

இவ்வாறு திரும்பிய அகதிகளே சிறிலங்கா கடற்படையினரால் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர். மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட இம்மூவரையும் சிவில் அதிகாரிகள் ஊடாக சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு பொலிசாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## மன்னாரில் வயிற்றோட்டம்

(மன்னார்)

மன்னார் நகரப் பகுதியில் தற்சமயம் வயிற்றோட்டநோய் பரவி வருகிறது. மன்னார் பொது வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட பலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் ஒரு வகை வைரஸ் கிருமியினாலேயே பரவி வருவது கண்டறியப்பட்டுள்ளது. (மி)

## 14

➡ ரஷ்யாவின் "சோயூஸ்.டி.எம்.ஏ-5" என்ற விண்கலம் கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்தில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள 5 தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பத்துப் பேர் பலி, 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.



காயமடைந்தவர் அகற்றப்படுகிறார்...

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் ஓ.எச்-58 என்ற ஹெலிகொப்டர் வீழ்ந்து நொருங்கியதில் இரண்டு படையினர் பலி.

➡ காஸாவில் இருந்து இஸ்ரேலியக் குடியேற்றங்களை வெளியேற்றும் பிரதமர் ஏரியல் ஷரோனின் திட்டத்திற்கெதிராக ஆயிரக்கணக்கான இஸ்ரேலியக் குடியேற்ற வாசிகள் ஜெருசலேமில் ஆர்ப்பாட்டம்.

➡ ஆபிரிக்க நாடுகளில் பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக 53 ஆபிரிக்க ஒன்றிய நாடுகளதும், அமைச்சர்களினது ஒன்றிணைந்த மாநாடு இடம்பெற்றது.

➡ பாகிஸ்தானில் முஷாரப் இராணுவத் தளபதியாக நீடிப்பதற்கு பாராளுமன்றத்தில் ஒரு மனதாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் உள்ள கடும் பாதுகாப்பிற்குட்பட்ட பச்சை வயல் பாதுகாப்புப் பகுதியில் இரண்டு தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் அமெரிக்கப்படையினர் உட்பட ஆறுபேர் பலி.



உலங்குவானூர்தி தேடுதல்

## 15

➡ வெனிசுவெலாவின் தலைநகரில் 54 மாடியினைக் கொண்ட கட்டடமொன்றின் 34 ஆவது மாடியில் திடீரெனத் தீப்பற்றியது.

➡ சீனாவில் கடந்த ஓகஸ்ட் மாதம் அனுப்பிவைக்கப்பட்ட 20 ஆவது செயற்கைக்கோள் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள பெங்களாய்ப் பகுதியில் 4 அடுக்கு மாடி குடியிருப்பின் மீது மோதியது.

➡ ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகளினால் நடாத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்கப் படையினர் உட்பட 6 பேர் பலி.




➡ நேபாள மாவோயிஸ்ட்டுக்கள் தசரா திருவிழாவை முன்னிட்டு 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

## 16

➡ காஸாவின் குன்று முனைப் பகுதிகளில் இருந்து இஸ்ரேல் இராணுவத்தினர் சுமார் 200 டாங்கிகள் இராணுவ வாகனங்களுடன் வாபஸ்.

➡ ஈராக்கின் மேற்கு நகரான பாக்தாத்தில் தீவிரவாதிகளின் உறைவிடங்களென சந்தேகிக்கப்படும் இடங்கள் மீது அமெரிக்கப்படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் பொது மக்கள் 3பேர் பலி.

## 17

➡ பெலாரஸில் நடைபெற்ற வாக்கெடுப்பில் சனாதிபதி அலெக்ஸ் சாண்டர் லூக்கோசிங்கே வெற்றி.

➡ தமிழகத்தில் பெய்த பலத்தமழைகாரணமாக இடிதாக்கி 16 பேர் பலி.



பாதிப்புற்ற சிறுமிகள்...

➡ யப்பானின் டோக்கியோ மற்றும் கிழக்கு யப்பான் பகுதிகளில் நிலநடுக்கம்.

➡ தஜிகிஸ்தானில் ரஷ்யாவின் நிரந்தர இராணுவத் தளத்தினை அமைக்க தஜிகிஸ்தான் இணக்கம்.

➡ பக்தாத்தில் மொக்டடா அல்-சத்தாரின் போராளிகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் பலி; பலர் காயம்.

➡ சவூதியரேபியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் 4 இலங்கைப் பெண்கள் பலி.


## 18

➡ காஸா பலஸ்தீன துப்பாக்கிதாரிகள் 4 பேர் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக் கொலை.



பலியானவரின் இறுதி ஊர்வலம்...

➡ மத்திய ஆசிய பொருளாதார கூட்டுறவு அமைப்பில் இணைவதற்காக ஒப்பந்தமொன்றில் ரஷ்ய சனாதிபதி புட்டின் கையெழுத்திட்டுள்ளார்.



➡ தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய சந்தன மரக் கடத்தல் காரரான வீரப்பனும், அவரது சகாக்கள் மூவரும் தமிழ்நாடு விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொலை.

➡ அமெரிக்காவில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு முன்கூட்டியே ஆரம்பம்.

## 19

➡ அமெரிக்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஈராக் பொலிஸ் தலைமை அதிகாரி உட்பட இரு அதிகாரிகள் விடுதலை.

## 20


➡ இந்தோனேசியாவின் புதிய சனாதிபதியாக சுகிலோ பாம்பேங்யுதோயோனோ பதவியேற்றுள்ளார்.

➡ ஜப்பானில் வீசிய கடும் சூறாவளி, மழை வெள்ளத்தினால் 50 இற்கும் மேற்பட்டோர் பலி; 36 பேர் வரை காணாமற்போயுள்ளனர்.



வெள்ளத்தின் பாதிப்பு

➡ மிசூரியின் வடகிழக்குப் பகுதியில் பயணிகள் விமானமொன்று விழுந்து நொருங்கியதில் 13 பேர் பலி;



எரியும் விமானத்தின் பாகம்

➡ மத்திய சீனாவில் ஹினான் மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 200 பேர் பலி; 100 பேர் வரை காணாமற்போயுள்ளனர்.



சுரங்க விபத்து

➡ லெபனான் பிரதமர் ராபிக் அல் ஹரிரி பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

➡ பலூஜாவில் புனித ரமழான் நோன்பு காலத்தில் அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பலி.

# சபாநாயகர் லொக்குபண்டாரவை பதவி நீக்கி ஹெலஉறுமய பிக்குவை நியமிக்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் சபாநாயராக பதவிவகிக்கும் லொக்குபண்டார ஆளும் கட்சி உறுப்பினரல்லாதவராக இருப்பதாலும் சந்திரிகா கூட்டணி அரசு எதிர்காலத்தில் எடுக்கும் சில நடவடிக்கைகளுக்கு அவர் குறுக்கிடுபவராக இருப்பதாலும் அவரை சபாநாயகர் பதவியி லிருந்து நீக்கிவிட்டு ஹெலஉறுமய எம்பியான உடுவேதம்மா லோக தேரரை சபாநாயகராக நியமிக் கத் திட்டமிடப்படுவதாக அறியவரு கிறது என 'ராவய' பத்திரிகை தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே சில வாரங்களுக்கு முன்பாக பிரதமர் மகிந்தராஜபக்ஷவினால் யோசனை தெரிவிக்கப்பட்டது. எனினும் யாரை சபாநாயகராக பதவியிலமர்த்துவது என்ற பிரச்சினை தோன்றியதால் இதுவரை காலந்தாழ்த்தப்பட்டது. பின்னர் உடுவே தம்மலோக தேரருடன் மங்கள சமரவீர, மேர்வின் சில்வா ஆகியோர் பேச்சுக் களை நடத்தி வருகின்றனர். இப் பேச்சுக்களின் பெறுபேறு பற்றி தெரியவரவில்லை.

# மார்பு நோய் சிகிச்சைகள் முல்லை.வைத்தியசாலையில் ஆரம்பம்

மார்புநோய் சிகிச்சை முல்லை மாவட்டவைத்தியசாலையில் 21.10.2004 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய கலாநிதி செந்தில்நாதன் சிறப்புச் சிகிச்சையையினை முல்லைத்தீவு நகரத்தில் அமைந்துள்ள முல்லை மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பித்துவைத்தார். இச் சிகிச்சை தொடர்ந்து நடைபெறும் எனவும் விசேடசிகிச்சை கிழமைகளில் மூன்றாவது புதன் கிழமை நடைபெறும். எனவும் முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் நாயகன் தெரிவித்தார். எதிர்வரும் 17.11.2004 அன்று இராண்டாவது விசேட சிகிச்சை இடம்பெறும் எனவும் மேலும் தெரிவித்தனர். இதன் ஆரம்ப நிகழ்வில் வவுனியா மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஜெகதீஸ்வரன் பிரதி மாகாண சுகாதாரசேவை பணிமனையினர் தமிழீழ சுகாதார சேவை பணிமனையினர், நோயாளர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20,08)

# கொள்ளையில் ஈடுபட்டுவந்த போலிச் சாமியார் கைது!

(கொழும்பு)

"போலிச் சாமியாரான இந்தியப் பிரஜை ஒருவரை மாத்தளைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

சாமியாராக வேடமிட்ட இந்நபர் வீடுகளுக்குச் சென்று நகைகள் மற் றும் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டவர் என்றும், இரவு முழுவதும் பிரார்த்தனை செய்து, நள்ளிரவிற்குப் பின் வீட்டார் உறங்கிவிட தனது கைவரிசையைக் காட்டி வெளியேறி விடுவார் என்றும், இதே போன்று வீடொன்றில் இருந்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகளுடன் சென்றபோதே இவரை சென்ற வியாழன் காலை கைது செய்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

காளியப்பன் பூபதி என்ற இந்நபரிடமிருந்து சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

மாத்தளை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட இந்நபர் தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கஞ்சாவுடன் சிப்பாய் கைது

(கொழும்பு)

தனது காலின் மீது நீளக் காற்சட்டையின் கீழ்ப் பகுதியுடன் இணைத்து கஞ்சாவை மறைத்து வைத்திருந்த ஊர்காவற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

செவனகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இந்த ஊர்காவற் படைச் சிப்பாய் 450 கிராம் கஞ்சாவுடன் தங்கல்ல பிரதேச மோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை.

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டம் (கார்ப்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### "ஆஅவ" கடன் இல - 2042 - SRI (SF)

# கேள்வி கோரல்-இல.02

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை புனரமைக்கும் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்குக் இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திடப்பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தஇனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01. | MU/CAARP/ED/15 | முல்/தண்ணீரூற்று அ.த.க பாடசாலையில் 110'x25' இரண்டு மாடிக் கட்டடத்தை மீள் நிர்மாணித்தல். | M6 | 57,000/= |
| 02. | MU/CAARP/ED/16 | முல்/விசுவமடு மகாவித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக் கட்டடத்தை மீள் நிர்மாணித்தல். | M6 | 57,000/= |
| 03. | MU/CAARP/ED/18 | முல்/முல்லைத்தீவு இந்து தமிழ்க் கலவன் வகுப்பறைக் கட்டடங்களை நீர், சுகாதார வசதிகளுடன் மீளக்கட்டுதலும் திருத்தம் செய்தலும். | M7 | 38,000/= |
| 04. | MU/CAARP/ED/19 | முல்/மல்லாவி மத்திய கல்லூரி வகுப்பறைக்கட்டடங்கள் நீர், சுகாதார வசதிகளுடன் திருத்தம் செய்தல். | M7 | 40,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (MCCASL) உறுப்பினராக (ICTAD) டுடன் மேற்படி M7க்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல்வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்பட வேண்டும். அல்லது கிளிநொச்சி,முல்லைத்தீவு,அம்பாறை மாவட்டங்களில் உள்ள 01.07.2003 இற்குப் பின் இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைக்ளினதும் முழு நிலவரமொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பெறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றல் அளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதிக்கப்படும். ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் (CAARP) வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படல் ஆகாது.01.07.2003 இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒத்த தன்மையிலான வேலைகளை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ முடிந்திருந்தால் ஏதாவது ஒப்பந்தக்காரர்களுக்கு (CAARP) திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD,முல்லைத்தீவில் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஒப்பந்த ஆவணங்களை 2004-நவம்பர் 01 இலிருந்து 2004. நவம்பர் 10 வரை முற்பகல் 9.30லிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= ஐ செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2004. நவம்பர் 15 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

08. கேள்வி முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள்,தலைவர், மாவட்ட கேள்விச்சபை, CAARP மாவட்டக் கருத்திட்ட அலுவலகம், கச்சேரி முல்லைத்தீவிற்கு 2004 நவம்பர் 22 முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**வே.விசுவலிங்கம்**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை பதில் அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-10282)

# பாசவலை வீசி வீரப்பனை

# மோசம் செய்தனர் அதிரடிப்படையினர்

## திடுக்கிடும் புதிய தகவல்



(சென்னை)

**வீரப்பனை அதிரடிப்படையினர் சுட்டுக் கொன்றது தொடர்பாகவும் அவரைத் தமது வியூகத்தில் சிக்க வைப்பதற்கு அதிரடிப்படையினர் வகுத்த தந்திரங்கள் தொடர்பாகவும் நாளாந்தம் புதிய தகவல்கள் வெளியாகி வருகின்றன.**

இறுதியாக வந்த தகவலின் படி வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி மூலமே வீரப்பனை அதிரடிப்படையினர் வெளியில் கொண்டுவரத்திட்டம் தீட்டி வெற்றி கண்டனர். எனும் திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. வீரப்பன் கண்பார்வைக்கோளாறு காரணமாக அவதியுறுகிறார் என்பதை அறிந்த அதிரடிப்படையினர் இரகசியமான முறையில் வீரப்பனின் மனைவியை அணுகி வீரப்பனின் நிலை பற்றியும், அவருக்கு ஏற்படுத்த வேண்டிய சத்திர சிகிச்சை பற்றியும் தம்மால் ஒழுங்கு படுத்தப்பட்ட நபர் மூலம் தெரியப்படுத்தினர். இவ்விடயத்தில் வீரப்பனின் மனைவிக்கு எவ்வித சந்தேகமும் ஏற்படாத வகையில் இருப்பதற்காக வீரப்பனின் நெருங்கிய அல்லது வீரப்பனின் விசுவாசி போன்ற ஒருவரையே இத்திட்டத்திற்கு அதிரடிப்படையினர் பயன்படுத்தியுள்ளனர்.

திட்டப்படியே மனைவியின் நம்பிக்கைக்கு இடமான நபர்களையும் மனைவியின் தன்மீதான அக்கறையை மட்டும் கருத்திற்கொண்டு காட்டை விட்டு வெளியில் வர வீரப்பன் முடிவெடுத்தார். இவ்விடயத்தில் வீரப்பன் தன் நெருங்கிய சகாக்களின் எச்சரிக்கை யினையும் உதாசீனம் செய்தார் எனத் தெரியவருகிறது. காட்டை விட்டு வெளியே வந்த வீரப்பனின் நகர்வுகளை தமது பூரண கண்காணிப்பில் வைத்திருந்து தக்க தருணத்தில் வீரப்பன் கும்பலை அதிரடிப்படையினர் தீர்த்துக்கட்டினர் என்று தெரிகிறது.

# காமராஜர் நினைவாக 100 ரூபாய் நாணயம்

மறைந்த பெரும் தலைவர் காமராஜர் உருவம் பொறித்த 100 ரூபாய், 5 ரூபாய் நாணயங்களை டில்லியில் வருகிற 27ஆம் திகதி பிரதமர் மன்மோகன்சிங் வெளியிடுகிறார். சோனியா காந்தி இந்த நாணயங்களைப் பெற்றுக்கொள்கிறார்.

இந்தியாவில் தற்போது 10 காசு, 25 காசு, 50 காசு, 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய் நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன. 100 ரூபாய் நாணயம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. முதல் முறையாக 100 ரூபாய் நாணயத்தைப் புழக்கத்தில் விட மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதுவும் மறைந்த முதல் -அமைச்சர் பெரும் தலைவர் காமராஜரின் உருவத்துடன் இந்த 100 ரூபாய் நாணயம் வெளியிடப்படுகிறது. இது தவிர சாதாரண மக்கள் பயன் படுத்துவதற்காக காமராஜர் உருவம் பொறித்த 5 ரூபாய் நாணயமும் வெளியிடப்படுகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மாசிலாமணி ஸ்ரீகாந்தன்

(காந்தன்)

காந்தா!
ஓராண்டு ஓடி மறைந்ததுவோ
இன்னும் எம் துயரங்கள் தீரவில்லை
ஆற நினைக்கிறோம் எம்மால் முடியவில்லை
உமது சிரித்த முகம்தான் தெரிகிறது
உமது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

25.10.2004 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்,
குடும்பத்தினர்,
மீசாலை மேற்கு,மீசாலை.

(5216)


# மராட்டிய முதல்வர் பதவி யாருக்கு?

## இழுபறிப்படுகின்றன காங்கிரசும் தேசியவாதக் காங்கிரசும்

(புதுடில்லி)

மராட்டிய முதல்வர் பதிவு தொடர்பாக சோனியாவும், சரத்பவாரும் நேற்று மீண்டும் சந்தித்துப் பேசியுள்ளனர். மராட்டிய மாநில சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸ், தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்க இருக்கிறது. ஆனால் முதல்வர் பதவி யாருக்கு என்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காங்கிரசுக்கு69 இடங்களும், தேசியவாத காங்கிரசுக்கு 71 இடங்களும் கிடைத்தன. 1999 தேர்தல் முடிவின்படி அதிக இடங்களில் வெற்றிபெற்ற தங்களுக்குத்தான் முதல்வர் பதவியைத் தரவேண்டும் என்று தேசியவாதக் காங்கிரஸ் கூறுகிறது. வெற்றிபெற்ற 3 மார்க்சிய கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.க்களுக்கு எங்கள் ஒதுக்கீட்டில் இருந்துதான் தொகுதிகள் கொடுத்தோம். அதனால் அந்த 3 எம். எல்.ஏக்களின் ஆதரவையும் சேர்த்தால் எங்களுக்குத்தான் அதிக இடம் இருக்கிறது. எனவே முதல்வர் பதவியை எங்களுக்குத்தான் தரவேண்டும் என்று காங்கிரஸ் சொல்கிறது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைவி சோனியாவும், தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவாரும் சந்தித்துப் பேசினார்கள். அதில் எந்த முடிவும் ஏற்படவில்லை. அதைத் தொடர்ந்து 2 ஆம் நிலைத் தலைவர்கள் மட்டத்தில் பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தை நடந்தது. அதிலும் உடன்பாடு ஏற்படவில்லையெனத் தெரிகிறது.

# “புதையலைத் தேடி வீரப்பன் காட்டிற்குச் செல்லாதீர்” மக்களை எச்சரிக்கிறது தமிழக அதிரடிப்படை

புதையலைத் தேடி வீரப்பன் காட்டிற்குள் யாரும் நுழையாதீர் என்று கிராமம் கிராமமாக அதிரடிப்படை ஒலி பெருக்கியில் எச்சரிக்கை விடுத்துள்ளது. தர்மபுரி அருகேபாடி கிராமத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் சேத்துக்குழி கோவிந்தன், சந்திரகவுடா, சேத்து மணி ஆகியோர் கடந்த 18 ஆம் திகதி அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில் வீரப்பன் காட்டில் பல்வேறு இடங்களில் பாறை இடுக்குகளில் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பதாகவும், பொலித்தீன் பைகளில் போட்டு பூமிக்குள் புதைத்து வைத்திருப்பதாகவும், தகவல் வெளியானது. சந்தனக் கடத்தல் வீரப்பன் மனைவி முத்துலட்சுமியும் தனது கணவன் சம்பாதித்த பணத்தை காட்டில் புதைத்து வைத்திருப்பதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மலைப்பகுதியில் வசித்துவரும் கிராமமக்கள் மற்றும் வீரப்பனுக்கு நெருங்கியநபர்கள், உளவாளிகள் பணமூட்டையைத் தேடி காட்டிற்குள் படைஎடுத்துச் செல்வதாக தகவல் வெளியானது. இதனைத் தொடர்ந்து பொலிசார் சத்தியமங்கலம் மற்றும் மேட்டூரை ஒட்டிய கத்திரிப்பட்டி, கண்டா, நீதிபுரம் உள்ளிட்ட பகுதியில் தீவிர ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கொளத்தூர் பொலிசார் வாகனங்களில் ஒலிபெருக்கி வைத்து காட்டிற்குள் யாரும் செல்லக்கூடாது என எச்சரித்து வருகின்றார்கள். அங்குள்ள இரண்டு தியேட்டர்களில் காட்டுக்குள் பொதுமக்கள் யாரும் செல்லக்கூடாது என எச்சரிக்கைப் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கொளத்தூர் பொலிஸ் அதிகாரி தினகரன் மற்றும் பொலிசார் தீவிரகண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# மேற்கு உத்தரப் பிரதேசத்தில் மர்மக் காய்ச்சல் 35 குழந்தைகள் பலி; 100 பேர் பாதிப்பு

மேற்கு உத்தரப் பிரதேசத்தில் மர்ம நோய் பரவியதால் 35 குழந்தைகள் பலியாகியுள்ளனர். 100 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு உத்தரப் பிரதேசத்தில் மர்ம நோய் பரவியுள்ளது. குழந்தைகளை மட்டுமே தாக்குகிறது. இதுவரை 35இற்கும் மேற்பட்ட குழந்தைகள் அந்த நோய்க்குப் பலியாகியுள்ளனர். 100இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள மருத்துவமனைகளில் கொலரா, மூளைவீக்கம், தண்டுவடத்தில் பாதிப்பு ஆகிய நோய் அறிகுறியுடன் ஏராளமான குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் பாக்பாத் மாவட்டம் கேக்ரா நகரில் 15 குழந்தைகளும், முஜாபர் நகரில் 10 குழந்தைகளும், சாஹாரான் நகரில் 10 குழந்தைகளும் இருந்தன.

100இற்கும் மேற்பட்ட குழந்தைகள் கடுமையான தலைவலி, காய்ச்சல், வாந்தி ஆகியவற்றுடன் மீரத், பாக்பாத் முஜாபர் நகர், கார்முக் தேஸ்வர் ஆகிய மாவட்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அது பற்றி மீரத் டி.விஷன் சுகாதார இயக்குநர் எஸ்.கே. அரோரா கூறுகையில், மூளையில் வீக்கம், வாந்தி ஆகியவையே மர்ம நோயின் அறிகுறியாக இருக்கிறது. சுகாதாரம் இல்லாத சூழ்நிலையில் வாழ்கின்ற குழந்தைகளே இந்த நோயால் பாதிக்கப்படுகின்றார்கள் என்றார்.


**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)

## சமையலாளர்/மேற்பார்வையாளர்கள் தேவை


- தரமாகவும், சுவையாகவும் உணவுகள் தயாரிப்பதற்கு சமையலாளர்/ சமையல் மேற்பார்வையாளர்கள் தேவை.
- சான்றிதழ்கள் உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உணவு, தங்குமிடம், சுகாதாரவசதிகள் இலவசம்.
- உள்நாட்டு உணவுகள் மட்டுமே தயார்படுத்தப்படல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத் தேர்வுகள் ஒக்டோபர் மாதம் 30 ஆம், 31ஆம் திகதிகளில் காலை 9.00-3.00 மணிவரை இடம் பெறும் விண்ணப்பதாரிகள் கீழுள்ள விலாசத்திற்கு முன்பும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகட்கு
R.ஜெகன்
131/1 ஸ்ரேசன் றோட் .வைரவபுளியங்குளம்.வவுனியா
TEL:024-2221593

(சி-10284)

# பைசலாபாத் டெஸ்ட்கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானை வீழ்த்தியது சிறிலங்கா



பாகிஸ்தானுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் பைசலாபாத்தில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சிறிலங்கா அணி 201 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் இறுதி நாளான நேற்று ஆறு விக்கெட்டுக்களை கைவசம் கொண்டு 301 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் 100 ஓட்டங்களை மட்டும் பெற்று மிகுதி ஆறு விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது.



முன்னதாக சிறிலங்கா அணி யால் வெற்றிக்காக நிர்ணயிக்கப்பட்ட 418 ஓட்ட இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் சொஹைப் மாலிக் 54 ஓட்டங்களையும், பர்ஹத் 53 ஓட்டங்களையும், யூசுப் யூஹானா 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் டில்கார பெர்னாண்டோ, ரங்கணஹேரத் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக 253 ஓட்டங்களைப் பெற்று சிறிலங்காவின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்த சனத் ஜெயசூரிய தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி வரும் 28 ஆம் திகதி கராச்சியில் ஆரம்பமாகின்றது.

## மாலிக்கின் பந்துவீச்சை ஆய்வுசெய்ய ஐந்து பேர்கொண்ட ஆலோசனைக்குழு



பாகிஸ்தானில் நடைபெற்ற பாக்டெல் முக்கோண கிண்ண ஒருநாள் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர் சொஹைப் மாலிக்கின் பந்து வீச்சில் தவறு சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து அவரின் பந்து வீச்சை ஆய்வு செய்து திருத்துதலுக்காக 5 பேர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அந்நாட்டு கிரிக்கெட் அதிகாரிகள் நியமித்துள்ளனர். மாலிக்கின் பந்து வீச்சு பற்றிகுறைகூறப்பட்டது இது இரண்டாவது தடவையாகும். இக்குழுவில் பயிற்றுனர் பொப்வுல்மர் பாகிஸ்தானிய முன்னாள் அணித் தலைவர் வக்கார் யூனிஸ், முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் இஜாஸ் பாக்யா ஆகியோரும் அடங்குவர்.

இதன் பின்னரும் அவரது பந்து வீச்சில் தவறு காணும் பட்சத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை அவரை போட்டிகளில் ஆட நிரந்தரமாக தடை விதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

## டெண்டுல்கரின் மீள் வருகை அவுஸ்.அணிக்கு சவாலானதே

—————ரிக்கி பொண்டிங்



டெண்டுல்கரின் வருகை அவுஸ்திரேலிய அணிக்கு நிச்சயம் சவாலாக இருக்கும் என்று அவுஸ்.அணித்தலைவர் பொண்டிங் தெரிவித்துள்ளார்.

முழங்கை வலி காரணமாக அவதிப்பட்டு வந்த டெண்டுல்கர் உடல் தகுதி பெற்று விட்டார். இதனால் நாக்பூரில் நடக்க இருக்கும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் கலந்துகொள்ள இருக்கிறார். டெண்டுல்கரின் வருகை இந்திய அணிக்கு பலம் சேர்த்துள்ளதாகவும், அவுஸ்திரேலிய அணிக்கு நிச்சயம் அது சவாலாக இருக்கும் என்றும் கப்டன் பொண்டிங் மும்பையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

கைவிரல் சிகிச்சைக்காக ஓய்வு எடுத்து வரும் பொண்டிங் தற்போது குணம் அடைந்து இந்தியா வந்திருக்கிறார். இவர் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை. ஆனால் மும்பையில் அடுத்த மாதம் நடக்க உள்ள கடைசி டெஸ்ட் போட்டியில் களம் இறங்க திட்டமிட்டுள்ளார். பொண்டிங் நிருபர்களிடம் மேலும் கூறுகையில் அவுஸ்திரேலிய அணியில் இடம் பிடிக்க முடியாமல் போனது மிகப்பெரிய வருத்தம். கில்கிறிஸ்ட் தலைமையிலான வீரர்கள் சிறப்பாக ஆடிவருகிறார்கள். இந்திய மண்ணில் 35 ஆண்டுக்குப் பின்னர் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற நிறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

## சிம்பாப்வேயின் சகலதுறை வீரர் சீன் எர்வின் ஹம்சயர் பிராந்திய அணியில் ஒப்பந்தம்



சர்ச்சைக்குள்ளான சிம்பாப்வே கிரிக்கெட் வீரர்களுள் ஒருவரான சகலதுறை வீரர் சீன் எர்வின் ஹம் சயர் பிராந்தியத்துக்காக விளையாட 2 வருடம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். இது அவரது திறமையை விருத்தி செய்வதற்கான ஆர்வத்தை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அணியின் ஏனைய வீரர்களும் பல பிராந்திய அணிகளுடன் ஒப்பந்தம் செய்துள்ளனர். அதன்படி ஹீத் ஸ்ரீக், வார்விக்சயர், கிராண்ட் பிளவர் ஆகியோர் எஸ்ஸெக்ஸ் ரேபிரைஸ் வாஸஸ்ர சயர், அணிகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மறுப்புத் தெரிவித்துள்ள சக வீரர் கெவின் பீற்றர் சன்னையும் லோகன்ஸ் அணியில் இணைக்க எண்ணியுள்ளனர்.

## சமியின் காயம் பாக்.அணிக்கு சிக்கல்

முகமது சமி காயம் காரணமாக பாகிஸ்தான் அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது சமி இலங்கைக்கு எதிரான பைசலாபாத் நகரில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் கலக்கிக் கொண்டிருந்தார். களத்தடுப்பில் ஈடுபடும்போது கடந்த வெள்ளியன்று அவருக்குக் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து நேற்று முன் தினம் நான்காம் நாள் ஆட்டம் முழுவதும் அவர் பந்து வீச முடியவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை அணி ஓட்டம் குவித்தது. அவர் காயம் பற்றி அணி மனேஜர் ஹாருண ரஷீத் கூறுகையில் "அவரது வயிற்றுப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறைந் தது எட்டு நாட்களாவது முழு ஓய்வு எடுக்கவேண்டும். சமி துடுப்பாட்டம் செய்யமுடியும். ஆனால் பந்து வீசும் நிலையில் அவர் இல்லை", என்கிறார். 28 ஆம் திகதி கராச்சியில் துவங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சமி பங்கேற்பது சந்தேகமே. இது பாக். அணிக்கு ஒரு பின்னடைவே.

## வெளிநாட்டுப் பயிற்சியாளரை வரவேற்கும் மே.தீவின் பந்துவீச்சாளர் வெஸ்பர்ட் ட்ரேக்ஸ்



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் வெஸ்பர்ட் ட்ரேக்ஸ் தமது அணிக்கு வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவதை வரவேற்றுள்ளார்.

தற்போதைய பயிற்றுவிப்பாளர் குஸ் லோஜிஸ்சின் ஒப்பந்த காலம் முடிவுக்கு வரும் நிலையில் அங்கு புதிய பயிற்சியாளர் நியமிக்கப்படவுள்ளார். உண்மையில் அணிக்கு பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படும் ஒருவர் நல்ல பெறுபேற்றை பெற்றுத் தரும் ஒருவராக இருக்க வேண்டும் என ட்ரேக்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 15 வருட காலமாக அணி பிரகாசிக்கத் தவறியுள்ளது. அத்துடன் உலக தரவரிசையிலும் சரிவு காணப்படுகிறது.

இதற்கிடையில் இப் பதவிக்கு அவுஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் கிரேக் செப்பல், பீற்றர் மூர்ஸ், இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் அணிப்பயிற்றுனர் ஆகியோரின் பெயர் அடிபடுகின்றன.

## சுவிஸ்காம் டென்னிஸ் தொடர் இறுதிப்போட்டிக்கு ஷரபோவா



'சுவிஸ்காம்' டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். சுவிட்சர்லாந்தில் உள்ள சூரிச் நகரில் 'சுவிஸ்காம்' டென்னிஸ் தொடர் நடக்கிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டி நேற்று நடந்தது. விம்பிள்டன் சாம்பியனான ரஷ்யாவின் ஷரபோவா், சக நாட்டு வீராங்கனையான எலீனா டெமன்டிவாவை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை இழந்த நிலையிலும் ஷரபோவா சிறப்பாக விளையாடி அடுத்த இரண்டு செட்களைக் கைப்பற்றினார். இவர் 4-6,6-2,6-3 என்ற செட்களில் எலீனாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## சுமாக்கரின் கார் விபத்துக்குள்ளானது காயம் எதுவுமின்றி உயிர்பிழைத்தார்

பிரேசிலில் உள்ள சாபாலோ நகரில் பார்முலா-1கார் ரேஸ் நடக்க உள்ளது. இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதற்கு முன்னதாக வீரர்கள் அனைவரும் பயிற்சி மேற்கொண்டிருந்தனர். உலகின் முன்னணி வீரரான ஜேர்மனியின் சூமாக்கர் பயிற்சியின்போது, கார் டயரில் ஏற்பட்ட இடையூறு காரணமாக திடீரென்று விபத்துக்குள்ளானது. உடனடியாக காரிலிருந்து குதித்ததால் சூமாக்கர் காயம் ஏதுமின்றி தப்பினார்.

## ஸ்கந்தா வி.கழகம் நடாத்தும் கால்பந்து இறுதிப் போட்டி இன்று

ஸ்கந்தபுரம் ஸ்கந்தா.வி.கழகம நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்ட போட்டியின் மூன்றாம் நாள் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

நேற்றைய போட்டி முடிவுகளின் படி அரையிறுதிப் போட்டிக்கான அணிகள் தெரிவாகின.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் உருத்திரபுரம் நீலம் அணியை எதிர்த்து முழங்காவில் விநாயகர் அணியும்,இரண்டாவது அரையிறுதியில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து ஜொலிபோய்ஸ் அணியும் மோதவுள்ளன. இவ்விரு போட்டிகளும் இன்று காலை நடைபெறுகின்றன.

இதில் வெற்றிபெறும் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி இன்றுமாலை நடைபெற்று பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.





## ஸ்பெயின் டென்னிஸ் போட்டி இறுதிப்போட்டியில் நல்பாண்டியன்

மாஸ்டர்ஸ் சீரியஸ் டென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் உள்ள மாட்ரிட் நகரில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் ஆர்ஜென்டீனா வீரர் டேவிட் நல்பாண்டியன், குரோஷிய வீரர் இவான் லிசிபிச்சுடன் மோதினார். இதில் டேவிட் நல்பாண்டியன் 6-4, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இறுதிப்போட்டியில் நல்பாண்டியன், அமெரிக்க வீரர் அகாசி அல்லது ரஷ்ய வீரர் மரட்ஷபினை எதிர் கொள்ளக்கூடும்.





23.10.2000 அன்று ஓயாத அலைகள்-04 நடவடிக்கையின் போது வீரகாவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் சேகர் அவர்களின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் ஆறு அணிகளுக்கிடையே நடைபெற்று இறுதி ஆட்டம் நேற்று போர்ப்பயிற்சிக் கல்லூரி யில் வடபகுதி, மத்தியபகுதி, தென்பகுதி ஆகிய அணிகளுக்கிடையே நடைபெற்று வடபகுதி அணி வெற்றிபெற்று சேகர் சுற்றுக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டது. இச்சுற் றுக் கிண்ணத்தை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிறப்புத்தளபதி லெப்.கேணல் நகுலன் அவர்கள் வழங்கிக்கௌரவித்தார்.



## சிந்தனைக்கு

சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## வண்டிலும், மாடும்!

தற்போதைய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள், முன்னைய பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தயின் கூற்று ஒன்றையே ஞாபகப்படுத்துவதாய் உள்ளது. மூன்றாம் கட்ட ஈழப் போர் தொடங்கிய வேளையில் அதற்கு முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் கடைப்பிடித்த யுத்த தந்திரோபாயத்தை விமர்சித்த அனுருத்த ரத்வத்த அதனை "வண்டிலின் பின்னால் மாட்டைக் கட்டியது" போன்றது என்றார்.

அவரின் கூற்றுக்களின் படி ஐ.தே.கட்சி அரசாங்கம் கைக்கொண்ட யுத்த தந்திரோபாயம் யுத்தத்தில் முன்னேறுவதற்கானதாகவோ, வெற்றி பெறுவதற்கானதாகவோ இல்லை என்பதாக இருந்தது. ஆகையினால் ரத்வத்தயின் அபிப்பிராயப்படி யுத்த தந்திரோபாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதாகியது. அதாவது மாடு வண்டிலின் முன்னால் கட்டப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் யுத்தத்தில் களைப்புற்று மாட்டை வண்டிலின் பின்னால் கட்டியதோ அன்றி மாடு முன்னோக்கி இழுக்க முடியாத நிலையில் பின்னால் கட்டப்பட்டதோ எதுவாக இருப்பினும் அனுருத்த ரத்வத்த மாட்டை யுத்த வண்டியின் முன்னால் கட்டினார் என்பது உண்மையே.

இதன் விளைவானது இங்கு கூறித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. இன்றைய யுத்தநிறுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தை என்பவை எல்லாம் ரத்வத்தை மாட்டை முன்னால் கட்டி யுத்தத்தை நோக்கி இழுத்துச் சென்றதன் விளைவுகளே ஆகும். அதாவது வண்டிலின் முன்னால் மாட்டைக் கட்டிய ரத்வத்தையால் அதனை முன்னோக்கி நகர்த்தவும் முடியவில்லை. வண்டிலை இழுத்துச் செல்லவும் இயலவில்லை. "வண்டிலும், மாடும் அடிவாங்கியதே மிச்சமாகியது"

ஆனால், பின்னர் அரசாங்கத்தைக் கைப்பற்றிய ரணில்விக்கிரமசிங்க யுத்த வண்டியில் பூட்டிய மாட்டை அவிழ்த்துவிட்டு சமாதான வண்டியில் மாட்டை முன்னோக்கியதாகக் கட்டியது, வண்டிலும் இலக்கு நோக்கி முன்னேறத் தொடங்கியது. ஆனால் ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கவிழ்த்த சந்திரிகா குமாரதுங்க மாட்டைக் அவிழ்த்துப் பின்னால் கட்டிவிட்டது போன்றதொரு நிலையையே உருவாக்கினார்.

அதாவது கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டதோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்தது. அதாவது மாட்டை வண்டிலின் முன்னால் பூட்டிச் சமாதானம் நோக்கி இழுத்துச் சென்றது.

இதில் ஏற்பட்ட சில இடையூறுகள் தடங்கல்கள் காரணமாகப் பயணம் தாமதமாயினும் தடைப்பட்டுப் போகவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அரசாங்கம் சனாதிபதியினால் கலைக்கப்பட்டது. வண்டிலில் இருந்து மாடும் கழற்றிவிடப்பட்டது.

இந்நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்த ஐ.ம.சு.முன்னணியின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பிரஸ்தாபித்தனரேயொழிய வண்டிளில் முன்னால் மாட்டைப் பூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. சமாதானம் பேச்சளவில் மட்டுமானதாகவே இருந்தது.

இது மாத்திரமல்ல, அரசாங்கத்தரப்பின் சில நடவடிக்கைகள் வண்டிலின் பின்னால் மாட்டைக் கட்டும் முயற்சியாகவும் இருந்தது. இதற்கான எடுத்துக்காட்டுகளே இறுதித்தீர்வு பற்றிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பதும், புலிகள் தயாரித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான மாற்றுத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்ற அறிவிப்புக்களும் ஆகும்.

இதன் அடுத்த கட்டமே தற்பொழுது ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக்கோரி அரசாங்கத்தரப்பு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டுள்ளமையாகும். அரசாங்கத்தரப்பின் நடவடிக்கையானது கூரையேறிக் கோழிபிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம் என்பதற்கு ஒப்பானதாகவுள்ளது.

அதாவது அரசாங்கத் தரப்பின் இச்செயற்பாடானது வண்டிலின் பின்னால் மாட்டைக்கட்டி விடுவதற்கு ஒப்பானதாகும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படமாட்டாது என்பது மட்டுமல்ல, சிலவேளைகளில் அது பின்னோக்கி இழுக்கப்படுவதற்கும், வண்டில் குடைசாய்ந்து விடுவதற்கும் காரணமாகிவிடலாம். ஆனால்; ஆளும்தரப்பு இதைப்பற்றியெல்லாம் கவலை கொண்டதாக இல்லை. ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து அரசாங்கத்திற்கு அக்கறை எதுவும் இருப்பதாக இல்லை.

# 10 ஆயிரம் குளங்கள் புனரமைப்பு திட்டத்திற்கு அமெரிக்காவிடம் நிதிபெற ஜே.வி.பி. விருப்பம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பத்தாயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டத்திற்கு அமெரிக்க சனாதிபதியிடம் இருந்து நிதி பெறுவதற்கு ஜே.வி.பி. விரும்புவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பி அமைச்சரான அநுர குமார திஸ்ஸ நாயக்கவின் கீழுள்ள விவசாய அமைச்சே ஐக்கிய அமெரிக்காவின் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் மிலேனியம் கணக்கிலிருந்து மேற்படி திட்டத்திற்கு நிதிபெற ஆலோசித்துள்ளது.

அமைச்சரின் கோரிக்கை உட்பட பத்தாயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் பிரேரணைகள் அமெரிக்க அரசாங்கத்திற்கு சுருக்கமாக அறிவிக்கப்படும் என்றும்,பெறப்படும் நிதி வெளிநாட்டமைச்சின் ஊடாக வழங்கப்படும் என்றும் நிதியமைச்சின் செயலாளர் ஜெயசுந்தர தெரிவித்ததாக "சண்டேலீடர்" செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டை ஜே.வி.பி. இது வரைகாலமும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு எந்தவொரு சலுகையும் கிடைக்கவழியில்லை

### -ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு எந்தவொரு சலுகையையும் அளிக்கக் கூடியதாக இருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதார முகாமைத்துவம் பலவீனமாகக் காணப்படுவதால் அரசாங்க வருமானம் வீழ்ச்சியடைந்திருப்பது இதற்குக் காரணம் என்று கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய வேளையே அவர் இவ்வாறு கூறினார். மேலும்கூறுகையில்,

வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதென்று சாடினார். மேலும் வெளிநாட்டு நாணய மாற்று கையிருப்பு வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், செயல் ரீதியான யதார்த்த நடவடிக்கை மூலம் இந்த நிலமைக்கு பரிகாரம் காணமுடியுமென்றும் அவர் கூறினார்.அரசாங்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்பிக்கவுள்ள வரவு செலவு திட்டத்தை ஜே.வி.பி தமது ஆலோசனையின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுவதாக கூறுகின்ற போதும் அது வெளி நாட்டவரும் நிதி அமைச்சின் செயலர் டி.பி ஜெயசுந்தரவின் குருவுமான கெப்ரின் என்பவரின் வழிநடத்தலில் சுமார் 30 நாட்களாக மேற் கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் போது பெருமளவு நிதிகள் சம்பளமாக வெளி நாட்டவரின் ஆலோசனைக்காக வழங்கப்பட்டதாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியதை குறை கூறினார். ஜேவி.பியின் அனுபவமற்ற ஒருவர் இவ்வாறு கூறியிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அனுபவம் வாய்ந்த அமைச்சரான மங்கள சமரவீர இவ்வாறான கருத்தை தெரிவித்தமை ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்திடம் உரிய பொருளாதார கொள்கைகள் இல்லை எனவே வாகன இறக்குமதியை தற்சமயம் கட்டுப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் இப்படியே போனால். கையடக்க தொலைபேசியின் இறக்குமதியை கூட அரசாங்கம் கட்டுப் படுத்துவதுடன் அத்தியாவசிய பொருட்களையும் கட்டுப்படுத்தி மீண்டும் 1971 ஆண்டு பட்டினி நிலை கொண்டு வரும் என்பதில் சந்தேகம் இல்லை. தற்சமயம் ஏற்பட்டு வரும் எரிபொருள் விலையேற்றமானது எதிர் காலத்தில் மேலும் உயரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.எனவே அரசாங்கம் எரிபொருளுக்கான வரியை நீக்கி மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். எரி பொருளுக்கான வரியை நீக்கினால், தற்போதைய பெற்றோலின் விலையில் 30 ரூபா வரையில் குறைக்க முடியும் அதே நேரம் டீசலை 15 ரூபா வரையில் குறைக்கமுடியும் எனவும் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். (32)

# சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க தனியொரு கட்சியினால் முடியாது

### -சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபகஷ

சமதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறை வேற்றுவதற்கு தனியொரு கட்சியினால் முடியாதெனவும் இதற்கு சகல அரசியல் கட்சிகளதும் ஒத்துழைப்பு அவசிய மென்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மாத்தளை கந்துனுப்பிட்டியவில் தென்மாகாண காணி உறுதி மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் வைபவத்தில கலந்துகொண்டு உரை யாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக அபிவிருத்திக்கும் அரசியல் பேதம் கிடையாது இது எமது நாடு நாம் பிறந்த மண் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதும் பாதுகாப்பதும் எம் அனைவரது கடமையாகும். இது தனியொருவருக்கு் மட்டும் உரித்தானதல்ல வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதும் யுத்தத்தை நிறுத்துவதும் இங்குள்ள தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழக்கூடிய சமூக மொன்றை கட்டியெழுப்புவதும் ஒருவருக்கொருவர் பயமும் சந்தேகமும் இல்லாது வாழும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதும் தனியொருவருக்குச் சொந்தமான விடயமல்ல எனவும் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். இன் நிகழ்வின் போது.

தென் மாகாணத்தில் உள்ள அரசாங்கக் காணிகளில் உறுதிகள் இல்லாது குடியிருந்த பலருக்கு காணி உறுதிகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

# உல்லாசப் பயணிகள் தொகை இந்த ஆண்டில் அதிகரிப்பு

இந்த ஆண்டின் முதல் 9 மாதஙகளில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இதற்கு முன்னில்லாதவாறு அதிகரித்துள்ளது.

உல்லாசப் பிரயாணிகளின் வருகையில் 11 சதவீத் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதென்று சுற்றுலாத் துறை சபை தெரிவிக்கின்றது. இந்தக் காலப் பகுதியில் இலங்கைக்கு 3 இலட்சத்து 75 ஆயிரத்திற்கு அதிகமான உல்லாசப் பிரயாணிகள் விஜயம் செய்தார்கள் என்றும் கடந்த மாதத்தில் மாத்திரம் சுமார் 51 ஆயிரம் உல்லாசப் பயணிகள் வருகை தந்தார்கள் என்று தெரி விக்கப்படுகின்றது. இதற்கு முன்னைய மாதத்துடன் ஒப்பிடும் போது 43 சதவித அதிகரிப்பு காணப் படுவதாகக் கூறப் படுகின்றது. சுற்றுலாத் துறையின் தலைவர் உதய நாணயக்கார தெரிவித்த தகவலில் இந்த ஆண்டில் இலங்கைக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் உல்லாச்ப் பயணிகள் வருகை தருவார்களென எதிர்ப்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தா.

# இரு இத்தாலியத் தயாரிப்பு துப்பாக்கிகள் வைத்திருந்தோர் கைது

இரண்டு கைத்துப்பாக்கிகள் வைத்திருந்த 02 பேரை வென்னப்புவப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.குறிப்பிட்ட 02 கைத்துப்பாக்கிகளும் இத்தாலியில் தயாரிக்கப்பட்டவையென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதுபற்றி மேலும் தெரியவருகையில் இத் தாலியில் இருந்து இலங்கைக்கு வந்தவர்கள் இந்த துப்பாக்கிகளை சந்தேக நபர்களுக்கு வழங்கியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிசார்கூறுகின்றனா.

# திருமலையில் 22சிங்கள முன்பள்ளி ஆசிரியைகள்
# த.பு.க. முன்பள்ளி அமைப்புடன் இணையவிருப்பம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவல பிரதேச செயலக பிரிவில் இயங்கி வரும் பதினொரு சிங்கள முன்பள்ளிகளில் பணி புரியும் 22 சிங்கள முன்பள்ளி ஆசிரியைகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்திற்கு வருகை தந்து தங்களின் முன்பள்ளி களையும், கிளிநொச்சியை தலை மையகமாகக் கொண்டு செயற்படும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக திரு மலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடந்து கொள்வதற்குத் தாம் தயார் என்றும் முன்பள்ளி சிங்கள ஆசிரியைகள் அச்சந்திப்பின் போது தெரிவித்தனர்.

மாவட்டப் பணிப்பாளர் கிருபா, சிங்கள முன்பள்ளி ஆசிரியர் களுக்கு பரிசுகளை வழங்கினார். ஒக்டோபர் 06 ஆம் திகதி திரு மலையில் சர்வதேச ஆசிரியர் தினத்தை ஒட்டி தமிழர் புனர் வாழ்வுக்கழகம் நடத்திய முன்பள்ளி ஆசிரியை கௌரவிப்பு நிகழ்வில் தாம் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக் கிடைக்காமற் போனமைக்கு கோம ரங்கடவல சிங்கள முன்பள்ளி ஆசிரியைகள் வருத்தம் தெரிவித்த னர். (25)

# யாழ்,கிளி.மாவட்டங்களுக்கிடையே விஞ்ஞானப் போட்டிகள்!

## – யாழ்.விஞ்ஞான சங்கம் ஏற்பாடு

கடந்தகாலங்களைப் போன்று இம்முறையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் பாட சாலைகளுக்கிடையே விஞ்ஞானப்போட்டிகளை நடாத்தத் தீர்மானித் துள்ளது. இம்முறை விஞ்ஞான வினாவிடை எழுத்துப்போட்டி, கட்டுரைப்போட்டி என்பனவற்றை இம்மாதம்27ஆம் திகதி (புதன்கிழமை) கீழ்வரும் பரீட்சை நிலையங்களில் நடாத்தத் தீர்மானித்துள்ளது. வேம்படி மகளிர் கல்லூரி-யாழ்ப்பாணம், வடஇந்து மகளிர் கல்லூரி-வடமராட்சி, கிளிநொச்சி மகாவித்தியாலயம்-கிளிநொச்சி. வினாவிடை எழுத்துப் பரீட்சை10.00-11.00 மணிக்கும் கட்டுரைப்போட்டி 11.15-12.15 மணிக்கும் நடைபெறும். மேற்படி பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்களிற்கான அனுமதி அட்டைகள் அவர்களினது பாடசாலை அ[illegible]பரினூடாக அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பாட[illegible]லைகளும் மேலதிக விபரங்களுக்கும் செல்வி.ஞா.தர்ஷனி உதவி பொதுச் சேவையாளர் யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம், விவசாயபீடம் (021222973)எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

# கேப்பாப்புலவு புதுக்குடியிருப்பு வீதியில் மூன்று பாலங்கள் நேற்றுத் திறப்பு

புதுக்குடியிருப்பு கோப்பாபுலவு வீதியின் 3பாலங் கள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரி தி.கே. ஜீவராஜ் பொதுச் சுடர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை புதுக்குடியிருப்பு முள்ளியவளை பிர தேசங்களின்



கோட்டப்பொறுப்பாளர் தி.இ.பிறையாளன் ஏற்றினார். மங்கல விளக்கினை தமிழீழ நிர்வாக சேவைத் திட்ட ஆலோசனைப் பொறுப்பாளர் சின் னப்பா மாஸ்ரர் முல்லை.மாவட்ட நிகொட் நிறுவனப் பணிப்பாளர் ரகுநாதபிள்ளை உட்பட பொறியி யலாளர்கள் துறை சார் பொறுப்பாளர்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.




வரவேற்புரையினை வீதி அபிவிருத்தி முல்லை. மாவட்ட அதிகார சபைத் திணைக்கள பொறி யியலா ளர் ஜெயமுகன் நிகழ்த்தினார். முதலாவது பாலத் தினை முதன்மை விருந்தினர் நிகொட் நிறுவன திட்டப்பணிப்பாளர் லங்காநேசன் நாடாவை வெட்டித் திறந்துவைத்துத் தனது வாகனத்தினை பாலத்தின் மீது செலுத்தினார்.

இரண்டாவது பாலத்தினை பாராளுமன்ற உறுப பினர் ச.கனகரத்தினம் நாடாவினைவெட்டித் திறந்து வைத்துத் தனது வாகனத்தினை பாலத்தின் மீது செலுத்தினார்.

மூன்றாவது பாலத்தினை முல்லை.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணன் நாடாவை வெட்டித் திறந்துவைத்து. அவரது வாகனத் தினை பாலத்தின் மீது செலுத்தினார்.

தொடர்ந்து தலைமையுரையினை வீதி அபிவிருத்



தித் திணைக்கள வவுனியா பிரதம பொறியியலாளர் சிவ.ராசலிங்கம் நிகழ்த்தினார். மாகாணப் பணிப்பாளர் திணைக்களப் பொறியியலாளர் ஏ.எவ்.எஸ்.ராஜேந்திரா வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத் தினம் முல்லைமாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சின்னண்ணை புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் தி.வீ.கனக சுந்தரசுவாமி ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து முதன்மை உரையினை நிகொட் நிறுவனப் பணிப்பாளர் லங்காநேசன் நிகழ்த்தினார் நன்றி யுரையினை முல்லைமாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் செல்வி.யசோதா நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்திப்அதிகாரசபை பணியாளர் கள் நிகொட் நிறுவனத்தினர்அரசசார்பற்ற பிரதிநிதிகள் துறைசார் போராளிகள. ஒப்பந்தக் காரர்கள் எனப் பலர்கலந்துகொண்டனர். (08,20)

## இந்திய...

இதன் விசேட நிகழ்வு நேற்று முற் பகல் 9.30 மணியளவில் சாவகச் சேரி சந்தை முன்றலில் தென் மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பேணாட் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் சாவகச் சேரி வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த தவச்செல்வம் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் சுப்பையா ஆகியோரும்

1987.10.24 இல் இப் படுகொலையின் போது பலியான பொதுமக்களின் நினைவுருவப்படத் திற்கான சுடரினை சாவகச்சேரி வர்த் தக சங்கத்தைச் சேர்ந்த சற் குண ராஜா, சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் நவரட்ணம், சாவகச் சேரி தேசிய எழுச்சிப் பேரவை யைச் சேர்ந்த அப்புத்துரை ஆகி யோரும் ஏற்றிவைக்க

நினைவுருவப்படத்திற்கான மலர் மாலையினை யாழ்.மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப் பாளர் செம்மணன், சர்வதேச தமிழீழ ம[illegible]ணவர் பேரவைத் தலை வர் பகீரதன் ஆகியோர் அணிவித் தனர்.

தொடர்ந்து நினைவுரைகள், சிறப்புரைகள் என்பனவும் இடம் பெற்றன. இதில் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள், வர்த் தகர்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் [illegible]னப்பெரும் திரளா னோர் கலந்து கொண்டனர். (33)

## திருமலை...

துறைமுகத்தை சுற்றி எவ்வித இராணுவ நிலைகளையும் கொண் டிருக்கவில்லை என்பதை தமது பிரதிநிதிகள் கண்டறிந்துள்ளனர் எனினும் குற்றம் சுமத்தப்பட்டுள்ள 3 இடங்கள் அமைந்துள்ளதாக கூறப்படும் தமிழீழ விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரால் செல்ல முடியவில்லை என அவர் தெரி வித்தார் இதேவேளை திரு கோணமலை துறைமுகத்தை சுற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் எறிகணை தாக்குதல் மையங்களை ஏற்படுத்தியுள்ளதாக புலனாய்வு பிரிவினர் அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

## விவசாயி...

யின் போது தேவையான நீரைப்பெற்றுக்கொடுக்க வேண்டு மென அரசாங்கத்திடம் கோரும் வகையிலேயே இந்த உண்ணா விரதம் நடத்தப்படுகிறது. (32)

## வீதி...

அவசிய நிலை உருவாகி உள்ளது. இதன் காரணத்தால் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும அரசஉயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு வீதி விபத்துக்கள் இடம் பெறுவதற்கான காரணங் கள் பற்றியும் இதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் என்பன உள்ளிட்ட போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பாக வரும் ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சி 1-9 தங்கக மண்டபத்தில் நடைபெற கிளி.மருத்துவ சங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு ஒழுங்கு படுத்தப்பட்ட மாநாட்டின் நிறைவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளது. இந்த மாநாட்டிற்கு ஒக்டோபர் மாநாடு எனப் பெயர் சூட்டப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (லோ.தீ)

## எமது...

சில தினங்களுக்கு முன்பு நோர்வே [illegible]ாட்டில் இருந்தீர்கள். நோர்வேத் தரப்பு [illegible]ிருந்த ஓர் அக்கறையுடைய சமாதான [illegible]ழிமுறைகளிலே முக்கிய பங்காற் [illegible]யது. இப்போது அவர்களிடம் இருந்து [illegible]பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிப்பதற்குரிய வாய்ப்புகள் இருக் [illegible]ின்றதா?

சர்வதேச சமூகம் குறிப்பாக நோர்வே அனுசரணையாளர்களும், சமாதானப் பேச்சுக் களினை மிக விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறையும் கரிசனையும் கொண்டிருப்பதை இந்தச் சந்திப்புகளின் போது நாங்கள் உணர்ந்து கொண்டோம். எங்களுடைய நிலைப் பாட்டிற்கு மிகவும் பொருத்தமாக இருப்ப தாகவும் அவர்களுடைய ஆர்வமும் அதே வேளை தலைமைப்பீடம் இதில் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்போடும் ஆர்வத்தோடும் இருக்கின்றது. என்பதும் புரிந்துகொள்ளத்தக் கதாய் இருந்தது. இது இரண்டிற்கும் பொருத்தமானதாகவும் ஒன்றாக அமைந்த வகையில் அவர்களுடைய சந்திப்புகள் இன்னமும் ஊக்கம் தருவதாக இருந்தது. மிகவிரைவாகப்பேச்சுக்கள் தொடங்குவதற்கு அவர்களுடைய தீவிர செயற்பாடு அமை கின்றது.

*** பேச்சுவார்த்தைகள் எப்போது தொடங்கும் என்று குறிப்பாகக் கூற முடி யுமா?**

இரு தரப்பினருடைய நிலைப்பாடுகளை வைத்துக்கொண்டு அனுசரணையாளர்கள் முடிவெடுப்பது கஷ்ரமான நிலை என்று நான் நினைக்கிறேன். அவர்கள் எங்களுடைய ஆர் வத்தையும் அக்கறையையும் எங்களுடைய நிலைப்பாட்டையும்அறிந்து கொண்டிருக் கின்றார்கள். அந்த வகையில் சனாதிபதியின தும் இலங்கை அரசாங்கத்தினுடைய நிலைப் பாட்டையும் அறிந்த பின்பு தான் அவர்கள் அதற்கான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

*** இந்தியாவும் இலங்கையும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றிலே கைச் சாத்திடுவதற்காக அதிகாரிகள் மட்டத்தில் ஒரு பேச்சுவார்த்தையினை நடத்திவருவதாகச் செய்திகள் கூறு கின்றன. இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி பல விதமான யோசனைகள் வந்துள்ள நிலையில் இது குறித்து உங் களுடைய நிலைப்பாடு என்ன?**

எங்களைப் பொறுத்தவரையில் இன்றைய சூழ்நிலையில் இரண்டு சமதரப்பு சமாதான முன்னெடுப்புக்களை எடுத்துவருகின்ற சூழலில் ஒரு தரப்போடு இவ்வாறான ஒப்பந்தங்களை செய்வதென்பது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தையும், அச்சத்தையும் கிளப்புகின்ற ஒரு சூழ் நிலையைத் தோற்றுவிக்கும். அந்த வகை யில் இந்த ஒப்பந்தம் செய்யப்படுகின்றதென்ற அதிகார பூர்வமான நிலைப்பாடுகள் எங்க ளுக்குத் தெரியாத நிலையில் இவ்வாறான செய்திகள் தற்பொழுது ஊடகங்களில் வந்துகொண்டிருக்கின்றது. இது அநேகமான தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்திய நிலையில் தான் இருக்கின்றது. ஆகவே இது பற்றிய உண்மையான அதிகார பூர்வமான நிலைப் பாட்டை தெரிந்துகொண்ட பின்பு தான் எங்க ளுடைய நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முடியும்.

*** இவ் ஒப்பந்தம் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பாதிக்கக் கூடிய அதற்கு ஒரு ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தக் கூடிய நிலைக்குத் தள்ளுமா?**

எங்களைப் பொறுத்த வரையில் இது பற்றிய சரியான உண்மையான நிலைப் பாடுகளையும் அதிகார பூர்வமான நிலைப் பாடுகளையும் தெளிவாக அறிந்த பின்பே எங்களுடைய நிலைப்பாடுகளை நிச்சயம் வெளியிடக்கூடியதாக இருக்கும்.

*** கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை அவர்கள் மருத்துவ சிகிச்சைக் காக வெளிநாடு சென்றதாகவும் இது தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வந் துள்ளன. தற்பொழுது அவரது நிலை என்ன? விடுதலைப்புலிகளுக்குள் மறு படியும் பிளவுடன் மற்றுமொரு தளபதியும் தொடக்கியிருக்கின்றார். கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார் என்றெல்லாம் தகவல் வந்தன இது உண்மையா?**

அப்படி ஒருபோதுமே நடக்காது. எங்க ளுடைய விடுதலைப்புலிகள் அமைப்பு எங்க ளுடைய தலைவருடைய தலைமைக்கு மிக உறுதியாகவும், இறுக்கமாகவும் எங்களு டைய கட்டமைப்பு மிகவும் கட்டுக்கோப்பாக இருக்கின்றது. அங்கு குழப்பத்திற்கோ, அல்லது இவ்வாறான வதந்திகளுக்கு இடமில்லை. மிகவும் இறுக்கமாகவும் உறுதி யாகவும் தலைவருடைய தலைமையில் நாங் கள் ஒரு குடும்பம் போன்று ஒற்றுமையுடன் எங்களுடைய விடுதலை அமைப்பு கட்டி யெழுப்பப்பட்டிருக்கின்றது. இனிஒரு போதும் அப்படியான வதந்திகளுக்கு இடமில்லை. சூசை அவர்கள் தற்போது சிகிச்சை பெற்று குணமடைந்து இருப்பதாகவும், இன்னும் ஓரிரு நாட்களில் இலங்கை திரும்பவுள்ளார் எனவும் தெரிவித்தார்.

## இ.நி...

யுள்ளதாக தெரிவித்த அவர். பௌத்த மதகுருக்களுக்கு சமாதான நீதவான் பொறுப்புகளை வழங்குவது குறித்து ஆராயப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (32)

## பேச்சு...

டும். என்ற அழைப்பையும் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம் சமா தான முயற்சிகளுக்கூடான அரசியலமைப்பு மாற்றத்துக்காக சனாதிபதி சர்வசன வாக் கெடுப்பு தொடர்பாகவும் தமது அறிவித்த லில் தகவல் வெளியிடுவார் என எதிர்பார்க் கப்படுகிறது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.